உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 30 | சாதாரண – பங்குனி – 10—4—71 | இதழ் 5

திருச்சிற்றம்பலம்

பொன்றயங் கிலங்கொளிங் நலங்குளிர்ந்த புன்சடை
பின்றயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே, – சம்பந்தர்.

திருச்சிற்றம்பலம்

## ஏழில் ஓர் எழில்

எண்கள் பலவற்றுள் 'ஏழு' என்ற எண்ணின் தமிழ் மக்கட்கு எவ்வகையிலோ ஒரு தனிப்பற்று உண்டாகியிருக்கின்றது. எதை எடுத்தாலும் அதை அவர்கள் 'ஏழு' என்ற எண்ணிக்கையில் குறிப்பிடுதல் காணலாம்.

உலகமே ஏழு. அவை கீழே ஏழு; மேலே ஏழு. நடுவில் உள்ள இந்தப் பூவுலகத்தில் உள்ள கடல்கள் ஏழு; தீவுகள் ஏழு. எல்லா உலகத்திலும் உள்ள பிறப்புக்கள் ஏழு. வினைப்பயன் தொடரும் பிறவிகள் ஏழு. உலகிற்கு வேண்டிய மழையைத் தரும் மேகங்கள் ஏழு. இசைகள் ஏழு; உயர்ந்தோராகிய முனிவர்கள் எழுவர்.

இப்படி எல்லாவற்றையும் ஏழாகக் கூறுதல் மரபாக உள்ளது. இந்த மரபைத் திருவள்ளுவரும் சில இடங்களில் பின்பற்றுவதைப் பார்க்கலாம்.

> " ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
> எழுமையும் ஏமாப் புடைத்து "

> " ஒருநாள் எழுநாள்போற் செல்லும், சேட் சென்றார்
> வருநாள்வைத் தேங்கு பவர்க்கு "

என்பனபோன்ற குறள்கள் அதற்கு எடுத்துக்காட்டாகும்.

இத்தமிழ்மரபு சைவ சமயத்திலும் காணப்படுகின்றது. சிவபேதம் ஏழு; சத்திபேதம் ஏழு; ஆன்மாவிற்கு முதற்கண் இன்றியமையாது வேண்டப்படும் வித்தியா தத்துவங்கள் ஏழு; இந்த முறையில் தமிழ் நாட்டில் உள்ள சிவதலங்கள் பலவற்றில் இந்திர லோகத்திலிருந்து இவ்வுலகிற்கு எழுந்தருளிய தியாகேசர் வீற்றிருந்தருளும் விடங்கந் தலங்களும் ஏழாகவே உள்ளன. இவைபோலவே சோழநாட்டுப் பாடல்பெற்ற தலங்களில் 'சத்ததானம்' எனப்படும் ஏழு தலங்கள் சிறப்புற்று விளங்குகின்றன. அவை, 'திருநெய்த்தானம், திருப்பூந்துருத்தி, திருக்கண்டியூர், திருவேதிகுடி, திருச்சோற்றுத் துறை, திருப்பழனம், திருவையாறு' என்பன. எனவே, இந்த 'ஏழு' என்ற எண்ணில் தமிழ்மக்கள் ஓர் எழிலைக் கண்டனர் என்பது புலனாகும்.

'எழில்' என்பதற்கு 'அழகு' என்பது ஒரு பொதுப் பொருள். ஆயினும் அதன் உண்மைப்பொருள், 'எழுச்சி' என்பதே.

> " நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில்நலம்
> மண்மாண் புனைபாவை யற்று "

என்ற திருக்குறளில், 'எழில்' என்பதற்கு, 'எழுச்சி' என்றும், 'நலம்' என்பதற்கு, 'அழகு' என்றும்

பரிமேலழகர் பொருளுரைத்திருத்தலைக்காணலாம். எழில் அல்லது எழுச்சியை, 'கம்பீரம்' என்பர். ஒருவன் அழ காய் இருத்தல் வேறு; கம்பீரமான தோற்றம் உடைய வனாய் இருத்தல் வேறு. 'எழு' என்பதிலிருந்தே 'எழில்' என்ற சொல் தோன்றிற்று. அதனால், 'எழுச்சி' என்பதே அதன் உண்மைப்பொருள்.

'ஏர்' என்ற மற்றொரு சொல்லும் தமிழில் உண்டு. அதற்கும், 'அழகு' என்றே பொருள் கூறுவர். அதுவும் பொதுவாகச் சொல்லப்படுவதே. 'ஏர்தல்' என்பதற்கும் 'எழுதல்' என்பதுதான் உண்மைப்பொருள். அதனை,

" உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு "

என்னும் திருமுருகாற்றுப்படை அடிகளில் 'ஏர்பு' என்ற தற்கு 'எழுந்து' என்று நச்சினார்க்கினியர் பொருள் கூறி யுள்ளார். சங்க இலக்கியங்களில் மற்றும் பலவிடத்தில் 'ஏர்தல்' என்பது 'எழுதல்' என்ற பொருளில் வருதலை எளிதில் காணமுடியும். 'அழகு' என்பது பல வகையில் உண்டாவது. அவற்றுள் எழுச்சி முதன்மையுடைய தாகலாம். அதனால், 'எழுச்சி' என்பதே 'அழகு' எனக் கொள்ளப்பட்டதாதல் கூடும்.

'எழில்' என்பதன் பகுதியாகிய 'எழு' என்பதற் கும், 'ஏழு' என்ற தமிழ் எண்ணிற்கும் ஒரு தொடர்பு இருத்தலை, எழு கடல், எழு பிறவி முதலியவற்றில் வரும் 'எழு' என்பதைக்கொண்டு உணரலாகும். எனவே, 'ஏழு' என்ற எண்ணில் தமிழ் மக்கட்கு ஓர் எழுச்சி - ஊக்கம் அல்லது ஆர்வம் இருந்ததெனக் கொள்ளலாம். இதுபற்றித்தான்போலும், தொல்காப்பியர் 'ஏழ்' என்று மெய்யீற்றுச் சொல்லாகக் கூறிய அந்த எண்ணுப் பெயரை, 'ஏழு' என உயிரீற்றுச் சொல்லாகவே கொண் டார் நன்னூலார்! இதனாலெல்லாம் 'ஏழு' என்னும் எண்ணில் உள்ள எழுச்சி புலனாவதாகும்.

இவ்வாறு ஏழு ஏழாக எழில்பெறச் சொல்லப்பட்டவைகளில் இன்று நாம் நேரில் கண்கூடாகக் காண்பன, ஏழு தியாகேசத் தலங்களும், 'சத்த தானம்' எனப்படும் திருவையாறு முதலிய ஏழு திருத்தலங்களுமாம். இவைகளில் சத்ததானங்களாகிய ஏழு திருத்தலங்களிலும் தலையாய எழில் பெற்று விளங்குவது திருவையாறே.

சித்திரைமாதப் பூரணையில் நடைபெறும் ஏழூர்த் திருவிழா என்னும் சிறப்புநிகழ்ச்சி, திருவையாற்றை ஒட்டியே நடைபெறுவது. ஐயாறப்பர் அருளால் சிலாத முனிவருக்குப் புதல்வராய் அவதரித்து, அப்பெருமானையே நோக்கித் தவம்செய்து சிவ சாருபமும், சிவகணத் தலைமையும் பெற்ற நந்தி தேவர், சுயசா தேவியைத் திருமணங்கொண்டு திருவுலாப்போந்த ஐதிகத்தை விளக்கி நிற்பதே ஏழூர்த் திருவிழா. அன்று நந்திதேவர் சுயசா தேவியுடன் வர, ஐயாறப்பர் கண்ணாடிப் பல்லக்கில் திருநெய்த்தானம் முதலிய மற்றைய ஆறு தலங்களுக்கும் எழுந்தருளி, ஆங்காங்குள்ள மூர்த்திகளும் வந்து உடன் சேர உலாப்போந்து, திருவையாற்றுக்கு மீள எழுந்தருள்வது கண்கொள்ளாக் காட்சியாகும். சித்திரை மாதக் கோடை வெயிலையும் பொருட்படுத்தாது அன்பர் கூட்டம் திரண்டு செல்லும் பத்திப் பெருக்கு, குறிப்பிடத் தக்கதொன்று. 'ஐயா றதனிற் சைவ னாகியும்' என்ற திருவாசகத்தின்படி சிவபெருமான் தன்னைத் தான் பூசித்த ஐதிகம் இத்தலத்தின் பெருவிழாவில் ஐந்தாம் நாள் நடைபெறும்பொழுது, மற்றைய ஆறு தலத்து மூர்த்திகள் இங்கு எழுந்தருளிக் காட்சி வழங்குவர்.

இத்தலத்திற்குத் தேவாரத் திருப்பதிகங்கள் பதினெட்டு உள்ளன. அவற்றுள் சம்பந்தருடையன ஐந்து; சுந்தரருடையது ஒன்று. ஏனைய பன்னிரண்டும் அப்பருடையனவே. அவற்றுள் "சிந்திப்பரியன" என்னும் திருவடித்திருவிருத்தம் இருபதுதிருப்பாடல்கள் உடையதாயிருத்தல் அறியத்தக்கது. மற்றும் "வேற்றாகி விண்ணாகி"

என்பது முதலிய மூன்று கயிலைப்போற்றித் திருத்தாண்டகப் பதிகங்களையும் அப்பர் பெருமான் இத்திருத்தலத்திலேதான் அருளிச்செய்தார். அவ்வாறு அவற்றை அவர் அருளிச்செய்யும்படி சிவபெருமான் தனது திருக்கயிலைக் காட்சியை அவருக்குக் காட்டியருளியது இத்தலத்திலேதான். இன்னும் சுந்தரர் தம் தோழராகிய சேரமான் பெருமாளோடும் திருக்கண்டியூர் வீரட்டத்தைத் தரிசித்துக் காவிரியின்பெருக்கால் அதனைக் கடந்து வர மாட்டாது வடகரையிலே நின்று, 'ஐயா றுடைய அடிகளோ!' என்று அழைத்துப் பதிகம் பாட, இவ் ஐயாற்றுப் பெருமான், 'ஓலம்' என்னும் அருளொலியால் அபயந் தந்து, காவிரி நீர் விலகச் செய்து அவர்களை அழைத்து அருள்புரிந்து விடுத்தான். எனவே, எழில் அமைந்த எழிலுடன் விளங்கும் ஏழுதலங்களிலும் மிக்களழிலுடைய அற்புதத் திருத்தலம் இத்திருவையாறாகும்.

"களித்துக் கலந்ததோர் காதற் கசிவோடு
காவிரிவாய்க்
குளித்துத் தொழுதுமுன் நின்றஇப் பத்தரை"

என்று அப்பர் பெருமான் அருளிச்செய்தவாறு, காவிரி நதி முதலிய இயற்கை எழிலுடன், வானளவிய கோபுரம், விமானம் முதலிய செயற்கை எழில்களாலும் சிறப்புற்றுத் தருமையாதீனத்திற்குச் சொந்தமானதாய் நித்திய நைமித்திகங்கள் யாவும் சிறப்புற நிகழ்ந்துவரும் இத்தலத் திருக்கோயில், இவ்வாதீனம் 25ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமாமணியவர்கள் திருவுளப்பாங்கின்வண்ணம் பல திருப்பணிகளால் புத்தம் புதிய எழில்பெற்று விளங்க, அண்மையில் இதன்கண் நிகழ்ந்த பெருங் குடமுழுக்கு விழா அன்பர்களது கண்ணையும், கருத்தையும் கவர்ந்து, பத்திப் பெருக்கில் ஆழ்த்தினமை குறிப்பிடத்தக்கது. விழாவின் அங்கமாக நடைபெற்ற அகண்ட திருமுறைப் பாராயணம், சமயச் சொற்பொழிவுகள் பட்டி மன்றம் முதலியவை அன்புள்ளத்திற்கும், அறிவிற்கும் அரிய விருந்தாய் அமைந்தன. 'இத்தகைய பெருஞ்

சிறப்புடன் காண்போம் அவர் திருப்பாதம்; கண்டறி யாதன காண்போம்' என்று ஐயாற்றப்பன் அருளை எதிர் நோக்கி அவாவுடன் காத்திருந்த அன்பர் அனைவர்க்கும் அப்பெருமானது பெருங் குடமுழுக்கு விழாப் பேரானந் தப் பெருநிறைவைத் தந்தது. இப்பேரானந்தப் பெரும் பேற்றை எய்தி இன்புற்ற அன்பர்கள், ஏழூர்விழா முதலிய குறிப்பிடத்தக்க சிறப்புக்களுள் சித்திரைப் பூரணையை முன்னிட்டு நிகழ இருக்கும் இத்தலப் பெருவிழா நிகழ்ச்சி யும் அடுத்து வர இருப்பதால், அதையும் எதிர்நோக்கி இருத்தல் இயல்பே. அதனையும் ஐயாறப்பன் அருள் அன்பர்கட்கு வழங்கி, அன்பும், இன்பும் நல்குவதாக.

---

## சொக்கநாத வெண்பா

உலக வெறுப்பும் உடல்வெறுப்பும் உள்ளத்
திலகு மலவெறுப்பும் எல்லாம் — அலகிறந்த
நந்தாத இன்பசுக நாட்டின் விருப்பமுறத்
தந்தாள்வை சொக்கநா தா. 11

எப்போது மும்மலம்விட் டேறுவேன் பூரணமாய்
எப்போதுன் இன்பசுகத் தெய்துவேன் — எப்போதும்
நித்தியா சுத்தா நிராமயா சொல்தவருச்
சத்தியா சொக்கநா தா, 12

காயமோ காலன் கருத்தோ மகாகாலன்
ஞாயமோ சற்றும் நடப்பதில்லை — பேயனேன்
மாளுவனோ தென்மதுரை மாமணியே என்னையுகந்(து)
ஆளுவையோ சொக்கநா தா. 13

எரிசுடுவ தல்லால் இரும்பு சுடுமோ
அரிஅயற்கும் வாசவற்கும் யார்க்கும் — பெரியவர்க்கும்
பூணுமே தந்தொழில்நின் பொன்னருளால் தென்மதுரைத்
தாணுவே சொக்கநா தா. 14

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக சுவாமிகள்

குருவருள்

# தோத்திரமும் சாத்திரமும்

## ஆளல்லேன் எனலாமே?

பயன்தரத்தக்க செயல் யாதாயினும் அதற்குச் சில நெறி முறைகள் இருத்தல் இயற்கை. ஒவ்வோர் உயிர்க்கும் அன்றாட நிகழ்ச்சியாகிய உண்ணல் உறங்கல் முதலிய நிகழ்ச்சிகளிலும் ஒழுங்கு முறைகள் இருக்கவே செய்கின்றன. இவ்வொழுங்கு முறைகள், நடைமுறையால் ஒருவாறு அறியப் படுமாயினும், முற்றிலும் அறியப்படா. அதனால் அவற்றை ஆன்றோர் நூல்களில் எழுதிவைக்கின்றார்கள். எனினும் எல்லாவற்றையும் எழுதி வைத்தல் இயலாது. காலத்திற்கும் இடத்திற்கும் ஏற்ப மேற்கொள்ள வேண்டியவற்றை மக்கள் அவ்வப்பொழுது தங்கள் அறிவு கொண்டுதான் அறிதல் வேண்டும். அவ்வாறு அறிந்து நடப்பது சிலவேளைகளில் நூல்களில் உள்ளதற்கு மாறானதுபோலக் கூடத்தோன்றலாம். சொல்லளவில் மாறானதுபோலத் தோன்றினும், நூற் கருத்தை நோக்கும் பொழுது அஃது அதற்கு ஒத்ததாகவே அமையும். ஆகவே, ஒழுங்கு முறைகள் என்பன எல்லா வற்றையும் 'இவை இவை இப்படிப்பட்டவைதாம்' என்று எழுதிவைத்தல் இயலாத ஒன்று என்பது விளங்கும். இதனை முன்னோர் பல வகையில் நமக்கு விளக்கியுள்ளார்கள்.

'இறையனார் அகப்பொருள்' என்ற நூலின் உரையில், அவ்வுரையாசிரியர் ஒரு கருத்தை விளக்கியுள்ளார். அஃதா வது, அந்நூலில் 'களவு' என்றஒன்று சிறப்பித்துப் பேசப்படு கின்றது. களவை இவ்வாறு சிறப்பித்துப் பேசுதல் கூடுமோ என்ற வினவை எடுத்துக்கொண்டு, 'களவு குற்றம்' என்பது பெரும்பான்மையாக உண்மையே யாயினும், சிறுபான்மை களவு நல்லதாதலும் உண்டு என்கின்றார் அவர். அஃது எவ்வாறெனின், ஒரு குடும்பத்தில் மற்றவர்களால் துன்புறு கின்ற ஒரு பெண் தான் உயிர்விடக்கருதி நஞ்சுவாங்கி

வைத்துக்கொண்டு அதை உண்பதற்கு யாருமில்லாத நேரத்தை எதிர்பார்த்திருந்தாள். அதை எப்படியோ தெரிந்து கொண்ட ஒருவன் அவளுக்குத் தெரியாமல் அந் நஞ்சினைக் கவர்ந்து கொண்டுபோய் எங்கோ எறிந்து விட்டான். அப் பெண் தான் கருதிய நேரத்தில் போய்ப் பார்த்தபொழுது தான் வாங்கிவைத்த நஞ்சினைக் காணாதவளாயினள். அதன் பிறகு அவளுக்கு உயிரைப் போக்கிக்கொள்ளும் எண்ணமும் மாறி விட்டது. இவ்விடத்தில் நஞ்சினைக் களவாடியவனுக்குக் களவினால் ஆகும் பாவம் வருமா? அல்லது நல்லசெய்கையால் ஆகும் புண்ணியம் வருமா? என்று கேட்டால் புண்ணியம் வரும் என்றுதானே சொல்ல வேண்டும்? ஆகையால் 'களவு என்ற சொல்லைக்கேட்டு உடனே அதைக் குற்றம் என்று கூறிவிடலாகாது' என்கின்றார் அந்த உரையாசிரியர்.

திருவள்ளுவரும் இதே கருத்தில்தான் "பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த நன்மை பயக்கு மெனின்" என்கின்றார். 'நிகழாத தொன்றை நிகழ்ந்தது' என்றோ 'நிகழ்ந்ததை நிகழவில்லை என்றோ' மாற்றிச் சொல்வதனால் எவ்விடத்திலாயினும் குற்றமற்ற ஒரு நன்மை விளைவதாயிருப் பின், அவ்வாறு மாற்றிக் கூறுதல், உள்ளதை உள்ளவாறே சொல்லிய வாய்மையேயாகும் என்கின்றார் திருவள்ளுவர். எனவே நூல்களில் உள்ள சொற்கள் எப்படி இருப்பினும், அவற்றின் பொதுக்கருத்து, 'நம்மால்பிறருக்கு எவ்வகையினும் தீமை விளையாமல், கூடுமானால் நன்மை விளையும்படி நடத்தல் வேண்டும்' என்பதேயாம். எனவே, நூல்களில்உள்ள சொற் களைப் பயன்படுத்திக்கொள்ளுதல் அவரவர் தன்மையைப் பொறுத்ததேயாகும் என்பது விளங்கும். இது பற்றியே திருவள்ளுவர்,

> "மனத்துக்கண் மாசில னாதல்; அனைத்தறன்
> ஆகுல நீர பிற"

என்று, மன நிலையையே அடிப்படையாகக் கூறினர். எனவே, யாதொரு செயலுக்கும் பயன் அதைச் செய்வோரது மனப் பான்மை பற்றி யல்லது அச் செயல் பற்றி யன்று என்பது தெளிவு. இதனால்தான் நம் நாயன்மார்களில் சிலரதுசெயல்கள் நமக்கு முரண்பட்டனபோலத் தோன்றினாலும், இறைவன் அவைகளை நற்செயலாகவேகொண்டு பயனளித்தருளினான்.

இத்தகைய செயல்களுட் சிலவற்றைச் சுந்தரர் குறிப்பிட்டருளிய திருப்பாடல் பலரும் அறிந்தது. அது,

" நற்றமிழ் வல்ல ஞானசம் பந்தன்
நாவினுக் கரையன் நாளைப்போ வானும்
கற்ற சூதன் நற் சாக்கியன் சிலந்தி
கண்ணப் பன்கணம் புல்லனென் றிவர்கள்
குற்றஞ் செய்யினுங் குணமெனக் கருதுங்
கொள்கை கண்டுநின் குரைகழ லடைந்தேன்
பொற்றி ரள்மணிக் கமலங்கள் மலரும்
பொய்கை சூழ்திருப் புன்கூ ருளானே "

என்பது. பாண்டியன் நெடுமாறன் சமணரைக் கழுவேற்ற உத்தரவிட்டபொழுது அதனை ஞானசம்பந்தர் விலக்காதிருந்தனர் என்று இன்றும் சிலர் குறை கூறுவர். நாவுக்கரசர் மருணீக்கியாராய் இருந்தபொழுது தம் தமக்கையார் சொல்லையும் கேளாமல் சமண சமயம் புகுந்ததைச் சைவரும், பின்பு அவர் அச்சமயத்தைத்துறந்து சைவம் சார்ந்ததைச் சமணரும் அக்காலத்தில் பெருங்குற்றமாகப் பேசியிருப்பர். திருநாளைப் போவார் தில்லைக் கூத்தப்பெருமானைத் தரிசிக்க விரும்பியதை வருணாச்சிரம ஒழுக்கத்தில் நின்ற அக்கால மக்கள் பலரும் எள்ளி நகையாடியிருப்பர். முற்பிறப்பில் சிலந்தியாயிருந்த கோச்செங்கட்சோழர் அப்பிறப்பில் சிவபெருமானுக்கு வாய் நூலாற் பந்தல் இட்டதை அப்பெருமானிடம் அன்பு கொண்டயானை வெறுத்து அச்சிலந்தியைக் கொல்ல முயன்றதும் நாம் நன்கறிந்ததே. சாக்கியரும், கண்ணப்பரும் செய்த செயல்கள் வெளிப்படை. உள்ளத்தில் அன்பின்றிப் பொக்கம் மிக்குப் பூவும் நீருங்கொண்டு பூசைசெய்யும் சைவராய் இருக்க விரும்பாமல், தமக்கு நன்றெனத்தோன்றிய சமண சமயம் புக்கதும், பின்னர் அச்சமயம் பயனற்றதெனத் தோன்றிய பின்னரும் அரசன் முதலியோருக்கு அஞ்சி அச்சமயத்தில் இராமல் வெளிப்போந்ததும் ஆகிய நாவரசரது செயல்கள் உண்மையின் வழிப்பட்டன அல்லவோ! இவற்றையெல்லாம் நோக்கியே இறைவன் அப்பெருமக்கட்கெல்லாம் நல்லருள் புரிந்தான்.

உலகியல் முறைகளையே இவ்வாறு, 'இஃது இஃது இப்படித்தான்' என்று ஒரேவகையாக வரையறுக்க இயலா

தென்றல். இறைவன் தன் அடியார்க்கு அருள்செய்யும் முறைமைகளை வரையறுத்தல் இயலுமோ! இயலாது. அதனை நோக்கியே ஞானசம்பந்தர்,

"ஆட்பாலவர்க் கருளும் வண்ணமும் ஆதிமாண்பும்
கேட்பான்புகில் அளவில்லை; கிளக்க வேண்டா;
கோட்பா லனவும் வினையுங் குறுகாமை எந்தை
தாட்பால் வணங்கித் தலைநின்றிவை கேட்க தக்கார்"

என்று அருளிச்செய்தார்.

இவ்வகையில் இறைவன் ஞானசம்பந்தரைப் பால் கொடுத்து ஆட்கொண்டான். நாவுக்கரசரைச் சூலைநோயால் வருத்தி ஆட்கொண்டான். சுந்தரரை வல்வழக்கிட்டு ஆட்கொண்டான் வாதவூரரை ஆசான் மூர்த்தியாய் வந்து அருளுபதேசம் செய்து ஆட்கொண்டான். மற்றும் பலரைப் பல வகையில் ஆட்கொண்டான். அந்நிலையில் சுந்தரரை முதலிலேயே தன் உண்மை வடிவில் வந்து முன்னை வரலாற்றைத் தெரிவித்து ஆட்கொண்டருளாமல் அவர்முன் வல்வழக்காளனாய்த் தோன்றி வல்வழக்கிட்டு அதற்கு எதிராக அவரும் வன்மை யான எதிர்வழக்குப் பேசித் தோற்கச்செய்து பின்னர் உண்மை உணர்த்தி ஆண்டருளினான். அதன் பின்பு அவர் தாம் இறைவனிடம் வன்மை பேசியதை எண்ணி இரக்க முற்றுப் பாடிய அருட்பாடல்களில் சிறப்பாகக் குறித்தருளியது, "அத்தா உனக்கு ஆளாய் இனி அல்லேன் எனலாமே" என்பது. அஃதாவது. 'என்றுநீ இருக்கின்றாயோ அன்றே உயிர்களும் இருக்கின்றன. ஆயினும், நீ என்றும் உயிர்களுக்கு ஆண்டான். உயிர்கள் என்றும் உனக்கு அடிமைகள். அம்முறையில் நானும் உனக்கு என்றும் மீளா அடிமையே. அது நிற்க, உனக்கு அணுக்கத் தொண்டு செய்யும் தொண்டனும் நிலையை முற்பிறப்பிலே நான் பெற்றிருந்தேன். அதனால், சிறப்பு வகையிலும் முன்பே உனக்கு நான் அடிமை. அவ்வாறிருந்தும் அதனை நான் மறந்த பொழுது நீ வந்து 'என்னை உனக்கு அடிமை' என்று அறிவித்த பொழுதும், 'நான் உனக்கு அடிமையல்லேன்; என்னை அடிமை எனக் கூறுகின்ற நீ என்ன, பித்தனோ' என்றெல்லாம் வன்மை பேசி இகழ்ந்தது எத்துணை அறியாமையின்பாற் பட்டசெயல்! இக்குற்றம் தீர்வது எவ்வாறு' என்று பாடினார். அவர்,

"பித்தா பிறை சூடீ" எனத் தொடங்கிய திருப்பதிகம் முழுவதிலும் இக்கருத்துத் தோன்ற அருளிச்செய்தார். இதன் உண்மை, சாத்திரங்களைக் கொண்டு நோக்கியவழியே இனிது விளங்குவதாகும்.

'விளம்பிய உள்ளத்து மெய்வாய் கண்மூக்கு
அளந்தளந் தறியா ஆங்கவை போலத்
தாம்தம் உணர்வின் தமியருள்"

"காணுங் கண்ணுக்குக் காட்டும் உளம்போற்
காண உள்ளத்தைக் கண்டு காட்டலின்"

"அக்கரங்கட் கெல்லாம் அகரஉயிர் நின்றாற்போல்
மிக்க உயிர்க்குயிராய் மேவினும் — எக்கண்ணும்
நில்லா விடத்துயிர்க்கு நில்லா தறிவென்று
நல்லா கமம்ஓதும் நாடு"

என்பன முதலியசாத்திரப் பகுதிகள். கண்முதலிய பொறிகட்கு ஆன்மா இல்லாதபொழுது காணும் ஆற்றல் முதலியன இல்லையாவதுபோல, யாதோர் உயிர்க்கும் இறைவன் இல்லாமல் யாதொன்றையும் அறியும் ஆற்றல் இல்லையாம். அதனால், கண்முதலிய பொறிகள் ஆன்மாவிற்கு என்றும் அடிமையாதல்போல, எல்லா உயிர்களும் என்றும் இறைவனுக்கு அடிமையே. இந்த ஆண்டான் அடிமைத் திறத்தை மறப்பதே அஞ்ஞானம். இதை மறவாது உணர்தலே மெய்ஞ்ஞானம். அந்த அஞ்ஞானமே துன்பத்திற்கெல்லாம் காரணம். அந்த அஞ்ஞானம் நீங்கி மேற்குறித்த மெய்ஞ்ஞானம் உண்டாகுமாயின், உயிர்க்கு எல்லா இன்பமும் வாய்க்கும். ஆகவே, என்றும் இறைவனுக்கு ஆளாய் நிற்கும் உயிர்கள் அதனை மறந்து, 'ஆள் அல்லேன்' எனக் கூறிச் செருக்கித்திரிதல் கூடுமோ! கூடாது என்பதனையே மேற்கூறிய தோத்திரமாகிய சுந்தரர் திருமொழி நமக்கு நன்கு அறிவுறுத்துகின்றது. அவ்வுண்மையும் சாத்திரத்தின் வழியே விளங்கத்தக்கதாகின்றது.

இவ்வாறு தோத்திர உண்மைகளைச் சாத்திரத்தின் வழி உணர்ந்து, ஆண்டவன் திருவடிக்கு ஆட்பட்டொழுகும் பேற்றினை மக்கள் பெறுவார்களாக.

உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான,

திருவையாறு ஸ்ரீ பஞ்சநதீசுவரசுவாமி தேவஸ்தானம்

மகாகும்பாபிஷேக விழாவை முன்னிட்டு

தருமையாதீனம்

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் அருளிய

# ஆசியுரை

ஓதிய ஞானமும் ஞானப்பொருளும் ஒலி சிறந்த
வேதியர் வேதமும் வேள்வியும் ஆவன விண்ணும் மண்ணும்
சோதியும் செஞ்சுடர் ஞாயிறும் ஒப்பன தூமதியோடு
ஆதியும் அந்தமும் ஆன ஐயாறன் அடித்தலமே.

மக்கள் தங்கள் நலத்திற்குத் தாங்கள் அமைத்துக்கொள்ளும் அமைப்புக்களையே காரணங்களாக நினைக்கின்றனர். எடுத்துக் காட்டாக, உயர்ந்த மாடமாளிகைகள், அவற்றைச் சுற்றியுள்ள சூழ்நிலைகள் அம்மாளிகைகளில் தொகுத்து வைத்துக்கொள்ளும் பல நுகர்ச்சிப்பொருள்கள் முதலியவையே தங்கள் நலங்கட்குக் காரணம் என்று நினைத்து, அவற்றைப் பெறுவதிலேயே தங்கள் ஆற்றலை யெல்லாம் செலவிடுகின்றனர். ஆனால் இவர்களாகச் செய்து கொள்ளும் இச்செயற்கைகளுக்கு அடிப்படையாக இயற்கைச் சூழ்நிலை நன்கு அமைய வேண்டும் என்பதை அவர்கள் மறந்து விடுகின்றனர். பருவமழையும், ஒத்த தட்ப வெப்ப நிலையும் போல்வன இயற்கைச் சூழ்நிலைகள். நிலம் அனைத்தையும் தாங்குதல் வேண்டும். மழையும், காற்றும் அளவில் அமைந்து உதவவேண்டும். இவை யெல்லாம் இல்லாமல் மக்கள் தங்கள் முயற்சியாலே எப்படி நன்மை தேடிக் கொள்ள முடியும்.

இத்தகைய அடிப்படை நிலைகளை நாம் பொதுவாக இயற்கைச் சூழ்நிலை என்று சொல்கின்றோம். ஆனால் இவைகளுக்கும் அடிப் படையாக இவை அனைத்தையும் மக்கள் நலத்தின் பொருட்டுத்

தக்க வகையில் ஆக்கி அமைக்கின்ற பெரும் பொருள் ஒன்று உண்டு. அதுவே 'கடவுள்' இறை, பரம்பொருள், என்றெல்லாம் சிறப்பித்துச் சொல்லப்படுகின்றது. முன்கூறிய இயற்கைச் சூழ்நிலைகளையே மறந்துவிடுகின்ற மக்கள், அவற்றிற்கும் அடிப்படையான இறைவன் திருவருளை நினையாதிருப்பதில் வியப்பில்லை. இதனை உமாபதி சிவாசாரியர் தமது திருவருட் பயனில்,

" தரையை யறியாது தாமே திரிவார்
புரையை யுணரா புவி "

என்று கூறியுள்ளார். எனவே, மக்கள் உண்மையாகவே தங்கட்கு நன்மை தேடிக்கொள்ள விரும்புவார்களாயின், இறைவன் திருவருளை மறவாதிருத்தல் வேண்டும்.

இறைவன் திருவருளைப் பெறுவதற்குச் சிறப்பிடமாக விளங்குவன திருக்கோயில்களே. அதனல் தனிமனிதருடைய நன்மைக்கும், சமுதாய நன்மைக்கும் ஆலயங்களின் நலம் இன்றியமையாதது ஆகும். ஆகவே, நாட்டிற்கு நலஞ்செய்யக் கருதுவோர் எவரும் ஆலயங்கள் செம்மையுற்று விளங்கவும், அவற்றில் நித்திய நைமித்திக நிகழ்ச்சிகள் குறைவற்று விளங்கவும் ஆவன செய்தல் வேண்டும். ஆலயங்கள் புறக்கணிக்கப்படுமாயின் அது நாட்டிற்கே நன்மையாகாது.

" ஆற்றரு நோய்மிக் கவனி மழையின்றிப்
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்திருக் கோயில்களானவை
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே "

" முன்னவ னார்கோயில் பூசைகள் முட்டிடின்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளங்குன்றும்
கன்னங் களவு மிகுத்திடுங் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத் தானே ".

என்பன திருமூலர் வாக்குக்கள். உடம்பிற்கு இருதயம் போன்றது ஊரிற்கு அதன்கண் உள்ள ஆலயம். உடல் தூய்மையைவிட உள்ளத் தூய்மையே சிறந்தது. அதுபோல ஊரின் தூய்மையைவிட ஆலயத்தின் தூய்மை பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும். அகப்பூசையால் உள்ளம் தூய்மை அடையும். ஆலயவழிபாட்டால் ஊரும், நாடும் நலம் பெறும். இதனையும்,

" உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானர்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே."

இப்படிப்பட்ட திருக்கோயில்களால் சிறப்புற்று விளங்குவது நம் தமிழகம். இத்திருக்கோயில்களில் பாடல்பெற்ற தலங்கள் என்பவை இறைவனுக்கு மிகவும் இனிய இடங்களாய்த் திகழ்கின்றன. அவைகளில் குறிப்பிடத்தக்க சில தலங்களில் ஒன்ருக விளங்குவது " திருவையாறு " எனப்படும் இப் பஞ்சநதீஸ்வரம்.

" புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
அறிவழிந்திட்டு ஐம்மேல் உந்தி
அலமந்த போதாக அஞ்சேல் என்று அருள்
செய்வான் அமரும் கோயில் "

என்று ஞானசம்பந்தர் இக்கோயிலைப் பாராட்டுகிருர். இதன் பல பெருமைகளில் சந்தான குரவர்களின் முதற் குரவராகிய நந்திதேவர் தவம் செய்து திருவருள்பெற்றது முதன்மையானது. அதனையடுத்து அப்பர் பெருமானுக்கு ஆண்டவன் தனது கயிலைக் காட்சியை இத்தலத்திலே காட்டியருளினமையால் இது தென்கயிலாயம் எனப் போற்றப்படுதல் குறிப்பிடத்தக்கது. "சப்தஸ்தானம்" எனப்படும் ஏழு ஸ்தலங்களில் இது நடு நாயகமாக விளங்குவது. சித்திரைப் பூரணை விசாக நட்சத்திரம் கூடும் நன்னுளில் நந்திகேஸ்வரர் சுயம்பிரகாசையோடு திருமணக்கோலமாய் உடன்வர, ஐயாறப்பர் அறம்வளர்த்த நாயகியோடு திருப்பழனம் முதலிய மற்றைய தலங்களுக்கும் சென்று அருட்காட்சி வழங்கி அளிக்கும் விழா ஆண்டுக்கொரு நாள் நிகழும் அரிய விழாவாகும். சிவபெருமான் ஓர் ஆதி சைவராகித் தன்னையே தான் பூசித்த திருவிழாவும் இங்குக் காணத்தக்கது. சுந்தரமூர்த்தி சுவாமிகளைச் சேரமான்பெருமாள் நாயனுரோடு காவிரி வெள்ளம் வழிவிடச்செய்து, அழைத்து இறைவன் காட்சி தந்தருளிய அற்புதமும் இங்கு நிகழ்வுற்றது. சுசரிதன் என்னும் ஓர் அந்தணச்சிறுவனுக்கு அவன் செய்த தபம் ஜெபம் முதலியவற்றுக்காக மகிழ்ந்து இறைவனல் ஏவப்பட்ட துவாரபாலகர் அவனது எமபயத்தை நீக்கியருளி ஆட்கொண்டார் என்னும் திருப்பெயருடன் இன்றும் காட்சி வழங்குகின்ருர். மற்றும் திருமால், பிரமன், இந்திரன், சூரியன் முதலிய தேவர்களும், அகத்தியர், ததீசி, கௌதமர், காசிபர், வசிஷ்டர் முதலிய முனிவர்களும், சிவப்பிரியன், கரிகாலன் முதலிய அரசர்களும்

இங்குப் பெருமானை வழிபட்டுப் பல நலங்களைப் பெற்றார்கள். நந்திதேவர் தந்தையாகிய சிவபாத முனிவரும் இங்குத் தவம் செய்து வரம் பெற்றே நந்திதேவரைப் புதல்வராகப் பெற்றார்.

இத்தலத்திற்குத் திருஞானசம்பந்தர் அருளிய திருப்பதிகம் ஐந்தும், திருநாவுக்கரசர் அருளிய திருப்பதிகம் பன்னிரண்டும், சுந்தரர் அருச்செய்த திருப்பதிகம் ஒன்றும் ஆகத் தேவாரத் திருப்பதிகங்கள் பதினெட்டு உள்ளன. "சிந்திப்பரியன சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப்பொழிவன" என்னும் திருவடித் திருவிருத்தம் இருபது திருப்பாடல்களை உடையதாக இருத்தல் குறிப்பிடத்தக்கது. திருவாசகத்திலும் இத்திருத்தலம் பல இடங்களைப் பெற்றுள்ளது.

"களித்துக்கலந்ததோர் காதற்கசிவொடு காவிரிவாய்க்
குளித்துத்தொழுது முன்னின்ற இப்பத்தரைக்கோதில் [செந்தேன்
தெளித்துச்சுவையமு தூட்டி அமரர்கள் சூழிருப்ப
அளித்துப் பெருஞ்செல்வமாக்கும் ஐயாறனடித்தலமே"

என்பது அப்பர் பெருமான் திருவாக்கு.

இங்குள்ள மூர்த்தி சுயம்புமூர்த்தி. செம்பொற்சோதிநாதர் ஜெபேசர், ஐயாறப்பர் முதலிய அருள் திருநாமங்கள் இவருக்கு உள்ளன. ஆலயத்தில் ஓரிடத்தில் "ஐயாறப்பர்" என்று ஒரு முறை அழைத்தால், திரும்ப அவ்வொலி ஏழுமுறை கேட்பதை இன்றும் கேட்டு இன்புறலாம். காசியில் உள்ளதுபோன்ற முத்தி மண்டபம் இங்கும் உண்டு. இத்திருக்கோயிலில், விழாக்களில் சிறந்த மகாகும்பாபிடேகமாகிய பெருஞ்சாந்தி விழாவை மக்கள் அனைவருங் கண்டு களித்துப் பிறப்பெடுத்ததன் பயனை அடைதற்குரிய வாய்ப்பினை ஐயாறப்பன் இன்று அனைவர்க்கும் வழங்கியுள்ளான். ஆலயத்தில் பல பாகங்களும் அவன் அருளால் பல திருப்பணிகள் நிறைவேறிப் புத்தம்புதியனவாகக் காட்சியளிக்கின்றன. அலங்காரங்கள் பல அழகுக்கு அழகு செய்து விளங்குகின்றன. பரிவாரமூர்த்திகள் எழுந்தருளியிருக்கும் ஆலயங்களும் கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன. இந்நிலையில் நிகழும் கண்கொள்ளாக் காட்சியாக ஐயாறப்பர் திருக்கோயில் மகாகும்பாபிஷேக விழாவினை மக்கள் பலரும் கண்குளிரக் கண்டு, கருத்துக்குளிர நினைத்தும், வாயார வாழ்த்தியும், மெய்யார வணங்கியும் அறம்வளர்த்தநாயகியோடு உடனாகிய ஐயாறப்பரது திருவருளுக்கு உரியவர்களாய், எல்லா நலங்களும் பெற்று இன்புறுவார்களாக.

# திருமந்திரம் - குறிப்புரை

திருக்குறள்வேள்,

## திரு. ஜி. வரதராஜப் பிள்ளை B. A,

(மலர் 30. இதழ் 4. பக்கம் 196 இன் தொடர்ச்சி)

### 4. இளமை நிலையாமை


177 கிழக்கெழுந் தோடிய ஞாயிறு மேற்கே
விழக்கண்டுந் தேருர் விழியிலா மாந்தர்
குழக்கன்று மூத்தெரு தாய்ச்சில நாளில்
விழக்கண்டுந் தேருர் வியனுல கோரே.

குறிப்புரை :- தேறுதல் - தெளிதல். விழியிலா - அறிவில்லா. கிழக்கே எழுகின்ற சூரியன் மேற்கே விழுவதைக் கண்டும் இளமை நிலையாமை அறியவில்லை என்க. குழக்கன்று - இளங்கன்று. அதேபோன்று இளங்கன்று அவ்வாறு இல்லாமல் மூப்பதைக் கண்டும் அறியவில்லை என்க. என்னே அறியாமை!

இளமை நிலையாமைக்கு இரு உவமை கூறியவாறு. 1


178 ஆண்டு பலவுங் கழிந்தன அப்பனைப்
பூண்டுகொண் டாரும் புகுந்தறி வார்இல்லை
நீண்டன காலங்கள் நீண்டு கொடுக்கினுந்
தூண்டு விளக்கின் சுடரறி யாரே.

குறிப்புரை :- ஆண்டு கழிதலாவது, இளமை மாறுதல். பூண்டு கொள்ளுதலாவது, திருவடியாகிய ஒளியைச் சிரசில் பெறுதல். இளமை மாருமுன்னம் இறையுணர்வு பெற வேண்டும் என்க. நீண்டன காலங்கள் - அளவற்ற காலங்கள். தூண்டு விளக்கு - தூண்டப்படும் விளக்கு. தூண்டப்




திருவையாறு திருக்கோயில் தோற்றம்

திருவையாற்றில் :-




தென் கயிலாயம்

திருவையாற்றில் :-



கண்ணாடிப் பல்லக்கில் ஸ்ரீ ஐயாறப்பர்

திருவையாற்றில் :-



கலக்காசு விநாயகர்

பட்ட விளக்கு மீண்டும் தூண்டாவிடின் ஒளி குன்றுமாதலின், ஒளியுள்ளபோதே பயனை அடைந்துவிடவேண்டும் என்க.

இளமையை வீணே கழிக்கலாகாது என்பதாம். 2

179 தேய்ந்தற் றொழிந்த இளமை கடைமுறை
ஆய்ந்தற்ற பின்னை அரிய கருமங்கள்
பாய்ந்தற்ற கங்கைப் படர்சடை நந்தியை
ஓர்ந்துற்றுக் கொள்ளும் உயிருள்ள போதே

குறிப்புரை :- இளமை அற்று ஒழிந்த - இளமை இற்று ஒழிந்தது. கருமங்கள் ஆய்ந்து அற்ற - கருமங்கள் பின்னர் ஆராய்ந்து செய்ய முடியாது. இளமை முடிவில் நல்வினைகள் அறிந்து செய்ய முடியாது என்க. பாய்ந்து அற்ற - பாய்ந்து மறைந்த. உற்றுக்கொள்ளும் - பொருந்தும்.

நந்தியை இளமையில் உற்று ஓர்ந்துகொள்மின் என்பதாம். 3

180 விரும்புவர் முன்னென்னை மெல்லியல் மாதர்
கரும்பு தகர்த்துக் கடைக்கொண்ட நீர்போல்
அரும்பொத்த மென்முலை ஆயிழை யார்க்குக்
கரும்பொத்துக் காஞ்சிரங் காயும்ஒத் தேனே.

குறிப்புரை :- முன் - இளமையில். கரும்பு நீர் - இனிக்கும் கருப்பஞ்சாறு. இளமையில் கருப்பஞ்சாறுபோல் மாதர்களுக்கு இனிமையாய் இருந்தேன் என்க. ஆயிழை - அழகிய ஆபரணம் அணிந்த பெண். காஞ்சிரங்காய் - கசக்கின்ற எட்டிக்காய். முதுமையில் எட்டிக்காய்போன்று கசந்தேன் என்க,

இளமை நிலையாததோடு முதுமை வெறுக்கப்படும் என்பதாம். 4

181 பாலன் இளையன் விருத்தன் என நின்ற
காலங் கழிவன கண்டும் அறிகிலார்
ஞாலங் கடந்தண்டம் ஊடறுத் தானடி
மேலுங் கிடந்து விரும்புவன் நானே.

குறிப்புரை :- பாலன் இளையன் விருத்தன் என்பன பருவ மாறுபாடு. உலகவர் பருவ மாறுபாட்டை அறியவில்லை என்க. அண்டம் ஊடறுத்தானடி – அண்டத்துக்கு மேல் விளங்கும்

திருவடி. மேலுங்கிடந்து - துவாதசாந்தத்தில் இருந்து. நான் துவாதசாந்த நிலைக்கு மேலிருந்து திருவடியினை உணர்ந்தேன் என்க.

இளமையிலேயே துவாதசாந்தத்தில் விளங்கும் சோதியைக் காணவேண்டும் என்பதாம். 5

182 காலை எழுந்தவர் நித்தலும் நித்தலும்
மாலை படுவதும் வாணாள் கழிவதுஞ்
சாலும்அவ் வீசன் சலவிய னாகிலும்
ஏல நினைப்பவர்க் கின்பஞ்செய் தானே.

குறிப்புரை :- படுதல் - சாதல். காலை இருந்தவர் மாலை இல்லை என்க. சாலும் - போதும். ஒவ்வொரு நாளாக வாழ் நாளை வீணாக்கியது போதும் என்க. 'பெரும்பற்றப் புலியூரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே' என்ற அப்பர் சுவாமிகள் வாக்கை ஒப்புநோக்குக. சலவியன் - சினமுடைய உருத்திரமூர்த்தி. ஏல - பொருந்த.

வாழ்நாளை வீழ்நாளாக்காது பொருந்த நினைப்பார்க்கு அருள்செய்வான் என்பதாம். 6

183 பருவூசி ஐந்துமோர் பையினுள் வாழும்
பருவூசி ஐந்தும் பறக்கும் விருகம்
பருவூசி ஐந்தும் பனித்தலைப் பட்டாற்
பருவூசிப் பையும் பறக்கின்ற வாறே.

குறிப்புரை :- பருவூசி - பருமையான ஊசி போன்ற ஐம்பொறி. பை - உடம்பு. பறக்கும் விருகம் - புறத்தே சென்று பற்றும் காகம் போன்ற பொறி. ஐம்பொறிகளும் புறத்தே சென்று பொருள்களைக் கவர்ந்துவரும் இயல்பின என்க. பனித் தலைப் படுதல் – பனிப் படலம் போன்ற ஒளி சிரசில் அமைதல். பருவூசிப் பையும் பறக்கின்றவாறே என்பது, அப்பொழுது நின்மல சாக்கிரம் அமைந்து இந்திரிய சேட்டை அறும் என்க.

இந்திரிய வசமிழந்தால் மேன்மையான இடத்துக்குச் செல்லலாம் என்பதாம். 7

184 கண்ணனுங் காய்கதி ரோனும் உலகினை
உண்ணின் றளக்கின்ற தொன்றும் அறிகிலார்

விண்ணுறு வாரையும் வினையுறு வாரையும்
எண்ணுறும் முப்பதில் ஈர்ந்தொழிந் தாரே.

குறிப்புரை :- கண்ணதும் – கண். கதிரோன் - அறிவு மயமான சூரியன். அறிவு மயமான சூரியன் நாடோறும் உலகினை அளக்கிறான் என்பதை அறிகிலர் என்று இரங்கிய படி. விண்ணுறு வாரையும் வினையுறு வாரையும் எண்ணுறும் என்பது, வினைக்கேற்ப விண்ணுலகத்துக்குச் செல்வதையும் நரகத்துக்குச் செல்வதையும் சிந்திக்கவும் என்றபடி. முப்பது, ஆயுளைக் குறித்தது. ஈர்ந்தொழிதல் - அறுந்து ஒழிதல்.

வினைக்கேற்ப விரைந்து அழிவு வருவதை அறியாமல் மடிகிறார்களே என்று வருந்தியபடி. 8

185 ஒன்றிய ஈரெண் கலையும் உடனுற
நின்றது கண்டு நினைக்கிலர் நீசர்கள்
கன்றிய காலன் கருக்குழி வைத்தபின்
சென்றதில் வீழ்வர் திகைப்பொழி யாரே.

குறிப்புரை :- ஈரெண்கலை – பதினாறு கலைகள்; அகரம், உகரம், மகரம், விந்து, அர்த்தசந்திரன், நிரோதினி, நாதம், நாதாந்தம், சத்தி, வியாபினி, வியோமரூபினி, அநந்தை, அநாசிருதை, சமனை, உன்மனை ஆகிய பதினாறு கலைகள். உடம்பிலும் உடம்புக்குமேலும் விளங்கும் இக்கலைகளில் சிவன் விளங்குகின்றான் என்க. கன்றிய - கோபித்த. கருக்குழி - கருப்பை. திகைப்பு - மயக்கம். சிவனை நினைந்து மருள் நீங்கவேண்டும் என்க.

சிவனை நினையாமல் பிறவியில் வீழ்வர் என்பதாம். 9

186 எய்திய நாளில் இளமை கழியாமை
எய்திய நாளில் இசைவினால் ஏத்துமின்
எய்திய நாளில் எறிவ தறியாமல்
எய்திய நாளில் இருந்துகண் டேனே.

குறிப்புரை :- இசைதல் – பொருந்துதல். இளமை கழியா முன்னம் ஏத்தவேண்டும் என்க. எறிதல் – செல்லுதல். பிராணனது இயக்கம் அறியாது இருக்கவேண்டும் என்க. இருந்து காணுதலாவது, தியானத்தானமாகிய ஆஞ்ஞா சக்கரத்தில் நிட்டை கூடியிருந்து தரிசித்தல்.

இளமையிலேயே இறைவனைக் காணவேண்டும் என்பதாம்.

# திருவையாற்றுப் பதிற்றுப்பத்தந்தாதி

## மூலமும் – உரையும்

உரையாசிரியர் :-

பண்டித வித்துவான், தருமையாதீனத் தமிழ்ப்புலவர்,

**திரு. இராம. கோவிந்தசாமிப் பிள்ளை**

(மலர் 30, இதழ் 4, பக்கம் 209 இன் தொடர்ச்சி)

### குருவணக்கம்

பனிமதிச் சடிலன் றக்கணு னனத்திற் பகர்ந்தவீ ராகமப்படியே
தனிமுத லாவ ரணத்தினுற் சுத்த சைவபூ சனையொடட்
[டாங்க
புனிதசே ரயனு மா (ரயனு) யெனக்குள மகிழ்வு பொருந்திட
[வருந்தமி ழியலைக்
கனிவுடன் புகன்ற குழந்தையேன் முனிவன் கமலமா
[மலர்ப்பதம் பணிவாம்.

(இ-ள்) பனிமதி சடிலன் - குளிர்ந்த இளஞ்சந்திரனைச் சூடிய சடாமகுடத்தினை யுடைய பரமன் (சந்திரசேகரன்) தக்கண ஆனனத்தில் - தென்முகமாக எழுந்தருளியிருந்து திருவாய் மலர்ந்தருளிய, வீராகமப்படி - வீராகமமென்னும் வீரசைவ நூலிற் கூறியபடியாகவே, தனிமுதல் (ஒப்பற்ற சிவலிங்கமாகியபரமேசுவரனை) ஏகனுவிருந்து, முதல் ஆவரணத்தில், சுத்த சைவ பூசனை ஒடு - சுத்தசைவமாகிய சிவபூசையுடன். அட்டாங்க புனித சேர் அயனும் ஆய் - ஆட்டாங்கமாகிய தூய்மை பொருந்தியமகேசனுய், எனக்கு உளம் மகிழ்வு பொருந்திட - அடியவனுக்கு மனமகிழ்ச்சி யமைய, அரும் தமிழ் இயலை கனிவுடன் புகன்ற - அறிதற்கு அரிய செந்தமிழ் மொழியிலுள்ள சீரிய இலக்கணத்தினை, உள்ளக் கனிவுடன் உரைத்தருளிய. குழந்தைவேல் முனிவன் - குழந்தைவேல் ஐயன் எனும் திருப்பெயர் பூண்டருளிய ஆசிரியனுடைய, கமலம் ஆம். மலர் பதம் பணிவாம் - தாமரைமலர் போலும் திருவடித்துணையினை அன்புகூர்ந்து வணங்குவோம். (எ-று)

நடேசதாசர் என்பவரின் இயற்றமிழாசிரியர் புனல்வாயில் எனும் நகரில் வாழ்ந்த குழந்தைவேல் ஐயர் எனும் வீர சைவ மரபினராவார். இவர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களுடைய மாணவர் ஆவர். இவ்வையர்பால் கற்றுணர்ந்தவருள் தலைசிறந்தவராவர் நடேசதாசர் எனும் மூத்துச்சாமி பாரதிகள் ஆவர். இவர் திருவையாற்றில் வடக்கு வீதியில் வாழ்ந்த இந்நூற்றுண்டுப் புலவராவார். இவ்வையாற்றுப் பதிற்றுப் பத்தந்தாதிக்குச் சாற்றுக்கவியருளினவர் மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையவர்களையுள்ளிட்ட ஐம்பத்தொருவராவர். இவர் இயற்றியன ஆட்கொண்டீசர்பதிகம் பாலசுந்தரவிநாயகர்பதிகம் விசுவகம்மியர் புராணம் முதலியனவாம். பாரதியெனும் பட்டம் ஸ்ரீ சங்கராசாரியசுவாமிகளால் வழங்கப்பெற்றதாகும். இவ் வரலாறு தனித்தெழுதப்பெறும்.

கடவுள் வாழ்த்து முற்றிற்று.

அவையடக்கச் செய்யுள் :-

(அறுசீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்)

பகருமைந் திலக்கணத்தோ டிலக்கியமாங் கடலொருங்கு
பருகிச்சான்றோர்
புகல்கவிமுன் சிறியேன் மொழிஞாலத் திருளகற்றும்
புலியின் காந்தி
நிகரெனமின் மினியுடலி னொளிகாட்டும் விதமெனினும்
நெடிய செம்பொற்
சிகரசின கரவையாற் றெம்பெருமான் பெயருறலாற்
சிறக்கு மன்றே.

(இ-ள்) பகர அரும் ஐந்து இலக்கணத்தோடு - கூறற்கு அரிய எழுத்துச்சொல் யாப்பு அணியெனும் ஐந்து இயல்களுடன், இலக்கியம் ஆம் கடல் - அவ்வியல்களுக்கு இலக்கியமாகிய பெருங்கடலை, ஒருங்குபருகி - ஒருமிக்கு சேர்த்துக் குடித்து (கடலைப்பருகின குறுமுனிவர்போல் பயின்று) சான்றோர் புகல் கவிமுன் - நிறைந்த (கல்வி யறிவினையுடைய) பெரும்புலவர்கள் கூறிய செய்யுட்களுக்கு முன்) சிறியேன் புன்மொழி - அவ்வியல் பொருந்தப் பெருத

அறிவிற் சிறுமையுடையேன் கூறுகின்ற புன்மொழிகளானவை எங்ஙனம் போலும் எனில், ஞாலத்து இருள் அகற்று அம்புலியின் காந்திநிகழ் என - பூமியின்கண் உள்ள புறவிருளைப் போக்கும் சந்திரனுடை பேரொளிக்கு ஒப்பாக, மின் மின் உடலின் ஒளி காட்டும் விதம் எனினும் - மின்மினிப் பூச்சி உடலினுண்டாகும் ஒளியினைக்காட்டும் விதமாக இருக்கும் என்றாலும், நெடிய செம்பொன் சிகரம் சினகரம் ஐயாற்று எம்பெருமான் பெயர் உறலால் - நீண்ட செம்பொன்மயமாகிய சிகரங்களையுடைய திருக்கோயிலின்கண் எழுந்தருளிய ஐயாற்றுப் பெருமான் திருப்பெயருடன் கூடலால், சிறக்கும் (அன்று ஏ) மேம்பாடு விளங்கும் (எ-று.)

(கு-உரை) அன்று ஏ அசைநிலைகள். சினகரம்-கோயில், புன்மைமொழி - புன்மொழி. காந்தி - ஒளி. இரவில் விளங்குபவன் - சந்திரன். இருளில் உலாவுவது - மின்மினி. புகல் கவி - வினைத்தொகை. விதம் - வகை. புன்மொழி - எழுவாய் சிறக்கும் - பயனிலை.

(பாயிரம் முற்றிற்று.)

## நூல்

(அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்)

திருப்பொற் பார்செம் மணிமார்பன் சிறையோ திமமீ
துறைவோனுந்
தருப்பொற் பார்மன் னிமையவர்மா தவரும்
பரவை யாற்றுவளர்
மருப்பொற் பார்மென் சிறுயறுகால் வரிவண்
டிமிர்பூந் துணரிதழி
உருப்பொற் பார்தண் பிறையுமணி யொருவா நின்ரு
டருவாயே.

சொற்பொருள் விளக்கவுரை :- திரு பொன்பார் செம் மணிமார்பன் - கண்டாரால் விரும்பப்படும் தன்மைநோக்கு

உடைய இலக்குமி பிராட்டியாருக்கும் பூமகள் பிராட்டியாருக்கும் தலைவரும் செவத்த கவுத்துவமெனும் பெயர்பெற்ற மணியை மார்பில் அணிந்த திருமாலும், சிறை ஓதிமம் மீது உறைவோன் - இறகுகளையுடைய அன்னப்பறவையாகிய ஊர்தியின் மேல் தங்குபவன் ஆகிய நான்முகனும், ஐ(ந்து) தருபொன் மார்பன் - ஐந்து தருக்களையுடைய பொன்னுலகுக்கு இறைவனாகிய இந்திரனும், இமையவர் - இமையா நாட்டமுடைய தேவர்களும், மாதவர் உம் - பெருந்தவமுடைய முனிவரரும், பரவும் - (எல்லா நலன்களையும் நாடி) துதிக்கின்ற, ஐயாற்றுவளர் - திருவையாற்றுப் பெரும்பதிக்கண் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள, மரு பொற்பு ஆர்மெல் சிறை அறுகால் வரிவண்டு இமிர் பூ துணர் இதழி - நறுமணமும் பொன்னிறமும் நிறைந்த மென்மையாகிய இறகுகளையும், ஆறுகால்களையும், இரேகைகளையும் உடைய வண்டுகள் ஆரவாரியா நின்ற கொத்துக்களால் ஆகிய கொன்றைப் பூவினையும் (சரக்கொன்றை) உருபொற்பு ஆர் - நிறப்பொலிவினையுடைய திரு ஆத்திப் பூவினையும், தண்பிறையும் - குளிர்ந்த பிறைச் சந்திரனையும், அணி - அணிந்தருளிய, ஒருவா - ஏகநாயகனே (ஒருத்தனே) நின்தாள் தருவாய் (ஏ) - தேவரீருடைய திருவடிப்பேற்றினைத் தந்து அருள்வீராக. ஏ-அசைநிலை.

ஐந்தருக்கள் - கற்பகம், சண்பகம் பாரிசாதம், சந்தானம், அரிசந்தானம் என்பன. இதழி, ஆர் என்பன முதலாகு பெயர். கொன்றைப்பூ ஆத்திப்பூ எனப் பொருள்படுதலால் ஐயாற்றுப் பரமனை சந்திரசேகரனே என விளித்திருப்பது மிகப் பொருளாழமுடைத்து. களங்கமும் குற்றமும் உடைய பிறைச்சந்திரனை நறையிதழி முடியிலிருக்கச் செய்தவர் நீர் குற்றம் யாதும் புரியாது தேவரீருடைய அடியிணை மலரினை வேண்டும் அடியனேற்கு அங்ஙனம் தந்தருளல் பெருமுறையாகும். நீ-எழுவாய். தருவாய்-பயனிலை. தாள் - செயப்படு பொருள்.

(தொடரும்)

உ
சிவமயம்

# திருவையாறு
# மகாகும்பாபிஷேகம்

**வி. சா. கு.**

தலச்சிறப்பு :

சோழவள நாட்டில் காவிரியின் வடகரையில் அமைந்து விளங்கும் இத்தலம் சமயாசாரியர் நால்வராலும் பாடப்பெற்றது. பூலோக கைலாயம் என்ற புகழ்மிக்க இத்தலம் பஞ்சநதம் சீவன் முத்திபுரம் என்ற பல திருப்பெயர்களை உடையது. அண்டத்தில் அட்ட மூர்த்தங்களில் ஒன்ருன இயமானனுய், பிண்டத்தில் ஆருதாரங்களில் ஒன்ருன ஆஞ்ஞையாய் மிளிர்வது. இறைவன் ஐயாறப்பர் சுயம்புமூர்த்தி, தீண்டாத் திருமேனி நாதர்; பிருதிவி அம்சம். அம்பிகை அறம்வளர்த்த நாயகி.

இறைவன்தானே ஆதிசைவர் வடிவில் தோன்றித் தன்னைத் தான் பூசித்துக்காட்டிய தனிச்சிறப்புடையது. இத்தலத்தில் சிலாத முனிவர் சிவபிரான் திருவருளால் நந்தியெம்பெருமானையே அரும்பெறல் மகவாகப் பெற்ருர்.

சுசரிதன் என்னும் அந்தணன் இத்தலத்தில் பஞ்சாக்கர ஜெபம் செய்து எமபயம் நீங்கப்பெற்ருன். இறைவன் இயமனை அழிக்குமாறு ஏவிய துவாரபாலகர் ஆட்கொண்டார் என்ற திருப்பெயரோடு அனைவராலும் கொண்டாடி வழிபடப் பெறுகிருர்.

இங்குள்ள தக்ஷிணுமூர்த்தி தமது பதினெண் பேதங்களில் ஸ்ரீ ஹரிகுருசிவயோக தக்ஷிணுமூர்த்தியாக விளங்குகிருர். இத்தலத் திருக்கோயிலில் உள்ள ஐபேச மண்டபம் மிகச் சிறப்புடையது.

திருக்கயிலைக் காட்சியைக் காணவிரும்பிக் கயிலை யாத்திரை செய்த திருநாவுக்கரசரை இறைவன் இமயத்தில் உள்ள ஒரு பொய்கையில் மூழ்குவித்து இத்தலத்தில் எழச்செய்து கயிலைக்காட்சியைக் காட்டியருளினன். இதனுல் இத்தலம் பூலோக கைலாயம் என வழங்கப்படுகிறது.

சுந்தரர் சேரமான் பெருமாள் நாயனரோடு காவிரி வெள்ளம் வழிவிட வந்து விளங்கிய அற்புதத்தை உடையது.

இங்கு நடைபெறும் சப்தஸ்தானத் திருவிழா உலகப்புகழ் பெற்ற பெருந் திருவிழாவாகும். இறைவன் அம்பிகையோடு கவின்மிகுந்த கண்ணடிப் பல்லக்கில் எழுந்தருளி நந்திதேவர் தம் துணைவியாரோடு உடன்வர ஏழூர்களுக்கு வலமாக எழுந் தருளி அருள்நலம் செய்யும் விழா இது. பல்லாயிரவர் இறை வனது இப்பவனியில் கலந்துகொண்டு இன்புறுவர். ஐயாற்றுச் சுற்றுப்புறங்களில் உள்ள ஊர்களெல்லாம் திருவிழாக் கோலங் களோடு விளங்கும். மக்கள் அனைவரும் தங்கள் தங்கள் இல்லங் களில் நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சியாகவே இதனைக் கருதிக் கொண்டாடுவர். இது இவ்விழாவிற்குரிய சிறப்பை விளக்கும்.

இத்திருக்கோயிலில் கட்டளை விசாரணையாக இருந்த ஸ்ரீ அழகிய திருச்சிற்றம்பலத் தம்பிரான் சுவாமிகளுக்கு இஷ்ட தெய்வமாய் விளங்கிய பழனியாண்டவர் சிறப்புடைய மூர்த்தி யாவர்.

தியாகையர் வடலூர் இராமலிங்க அடிகள் முதலானோர் ஐயாறப்பனைப் பாடி அருள்பெற்றவர்களில் குறிப்பிடத்தக்கவர்.

இத்திருக்கோயிலைப் பிரியவிருதன், நாயக்க மன்னர்கள் காலத்தில் கோவிந்த தீக்ஷிதர். விக்கிரம சோழன், குலோத்துங் கன் முதலானோர் திருப்பணிகள் செய்துள்ளனர். அரசர்களே யன்றி அரசியல் அதிகாரிகளும் குடிமக்களும் இத்திருப்பணியில் பங்குகொண்டிருந்தனர்.

திருவோலக்க மண்டபம் ஒரு பணிப்பெண்ணின் திருப்பணி என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்வாறு பல்வகையாகவும் சிறப்புற்று விளங்கும் இத் திருத்தலத்தில் இராஜராஜசோழன் மனைவி தந்திசக்திவிடங்கி ஓலோகமாதேவிச்சரம் என்னும் வடகயிலாயம் கோயிலையும், இராஜேந்திர சோழன் மனைவி பஞ்சவன்மாதேவி தென்கயிலா யத்தையும் திருப்பணி செய்துள்ளனர்.

### கும்பாபிஷேகச் சிந்தனை :

தஞ்சை மாவட்டத்தின் தனிச்சிறப்புடைய கோயில்களைச் சேர்ந்ததாய்த் தருமையாதீனத்தின் இருபத்தேழு கோயில்களில்

ஒன்றும் விளங்கும் இத்திருக்கோயிலைத் திருப்பணிகள் பலவும் செய்து சிறந்த முறையில் மகாகும்பாபிஷேகம் செய்விக்க வேண்டுமென்று பல்லாண்டுகளாகச் சிந்தித்தது ஒரு அருள் உள்ளம். திருப்பணிகள் செய்வதிலும், இறைவனுக்குப் பொன் அணிகலன்கள் பூட்டுவதிலும் கோடி அர்ச்சனை லக்ஷார்ச்சனைகள் செய்விப்பதிலும் கோயில் திருப்பணிகள் கும்பாபிஷேகங்கள் நடத்துவதிலுமே சிந்தனை முழுவதையும் செலவிடுகின்ற உள்ளம் அது! அவ்வருளாளர் எண்ணியன இறையருளால் எண்ணியவாறே நிகழ்ந்துவருகிறது. ஆம்! அருளாளர்கள் ஆழ்ந்து சிந்தனை செய்வதை இறைவனே முன்னின்று நிறை வேற்றத்தானே செய்வான்? அவ் அருள்வேந்தர்தான் தருமை யாதீனம் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள்.

தருமையாதீனத்தின் இருபத்தைந்தாவது குருமகாசந்நி தானமாக எழுந்தருளியிருந்து இமயம்முதல் குமரிவரை யாத் திரைசெய்து எண்ணற்ற சிவதலங்களைத் தரிசித்தும், மோனத் தவம் பெருக்கியும் திருமுறைகள் ஓதியும் ஓதத் செய்தும் திருக்கோயில் பரிபாலனங்களைக் கண்ணும் கருத்துமாகச் செய் தும், அறப்பணிகள் பலவும் ஆற்றி நாடு முழுதும் சிவம் பெருக்கும் தவவேந்தராகிய ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அவர்கள் இத் தலத்தில் அதிகமான ஈடுபாடு உடையவர்கள்.

திருக்கயிலாய பரம்பரையில் நந்தி தேவர் திருமரபில் வந்த வர்களாகிய இக்குருமணி அவர்கள் பெருமான் கயிலைக்காட்சி காட்டியருளியதும் நந்திதேவர் திருவவதாரஞ் செய்ததுமான இத்தலத்தில் அதிகமாக உறவுடையவர்களாகத்தானே இருப் பார்கள். மேலும் நமது குருமணி அவர்கள் திருக்கயிலை யாத் திரையை மேற்கொண்டருளிய காலத்தில் முதல் கயிலாயமாக விளங்கும் இத்தலத்திற்கு எழுந்தருளி விசேஷ வழிபாடுகள் செய்து தென் கயிலைத் திருப்பதிகங்களைப் பல நூறுமுறை ஓதச்செய்து யாத்திரை மேற்கொண்டார்கள். குருமணி அவர் களின் யாத்திரை வெற்றிக்கு ஐயாறப்பன் துணை நின்றான். ஐயாறுடைய அடிகளை இடைவிடாது சிந்தனைசெய்து கயிலை சென்று அப்பர் பெருமான் கயிலைகண்ட அதே ஆடி அமாவாசைத் திருநாளில் கயிலாய தரிசனம் செய்து மீண்டருளிய அக்குருமணியின் திருவுளத்தில் திருவையாற்றுத் திருக்கோயிலில் மகாகும்பாபிஷேகம் செய்விக்கும் சிந்தனை முகிழ்த்து எழுந்தது. அதுமட்டுமல்ல ஆதீனத் திருக்கோயில் கள் அனைத்தையுமே திருப்பணிசெய்து மகாகும்பாபிஷேகங்கள்

செய்வித்துச் செய்வித்துக் கைவந்த அவர்கள் திருவுள்ளம் ஐயாற்று இறைவனையும் குடமுழுக்காட்டிக் காண விழைந்தது.

## திருப்பணித் தொடக்கம் :

ஐயாற்றிறைவனை அர்ச்சனை ஆராதனைகளால் வந்தித்து வாழ்த்திய பின்னரே திருப்பணிகள் தொடங்கப்பெற வேண்டுமென்பது குருமணி அவர்கள் திருவுள்ளம்போலும். ஒருநாள் தேவஸ்தான நிர்வாகிகளை அழைத்து ஐயாறப்பனுக்குக் கோடி யர்ச்சனைகளைத் தொடங்குமாறு பணித்தார்கள். அர்ச்சனைகளின் தொடக்கமும் நிறைவும் சிறந்த விழாக்களாகக் கொண்டாடப்பெற்றன. விழாவில் கலந்துகொண்டவர்கள் அனைவரும் குருமணி அவர்கள் திருவுள்ளம் இனிது நிறைவேற வேண்டும் என்று பிரார்த்தனைகள் செய்தனர். திருப்பணிகள் பற்றிய துண்டுப் பிரசுரங்கள் அச்சிட்டு வழங்கப்பெற்றன. திருப்பணிகளில் ஈடுபடும் அன்பர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் திருப்பணிக் காணிக்கைப் பொருள்கள் ஏற்றுக்கொள்ளப்பெற்றன.

## திருப்பணி :

நான்காண்டுகளாகத் திருப்பணி வேலைகள் தொடங்கி நடைபெற்று வந்தன. கோயிலில் உள்ள இராசகோபுரம் முதலான எல்லாக் கோபுரங்களும் பழுது பார்த்துச் சுதைகள் அமைத்து வண்ணங்கள் தீட்டப்பெற்றன.

சுவாமி விமானம் அம்பாள் விமானம் மற்றுமுள்ள விமானங்கள் பழுதுபார்க்கப்பெற்றுப் புதுப்பொலிவு பெற்றன. புதிய சுதையுருவங்கள் அமைக்கப்பெற்று அழகுறுத்தப் பெற்றன.

திருவோலக்க மண்டபம் ஐப்பேசு மண்டபம் முதலான மண்டபங்கள், சுவாமிகோயில் மேல்தளம், தென்கயிலாயம் வடகயிலாயம் கோயில்கள், மண்டபங்கள், விமானங்கள் முதலியன பழுதுபார்க்கப்பெற்றன. சுதைகள் திருத்தி அமைக்கப்பெற்றன. சுவாமிகோயில் திருமாளிகைப் பத்தியில் உள்ள பழங்கால வண்ண ஓவியங்கள் புதுவண்ணம் தீட்டப்பெற்றன. கோயில் முக்கிய வாயில்களில் சுதை உருவங்கள் அமைக்கப்பெற்றன. சந்தானசாரியர் திருவுருவங்கள் புதியனவாகப் பிரதிஷ்டை செய்விக்கப்பெற்றன. பிராகாரங்கள் அனைத்தும் தளவரிசையிடப்

பெற்றன. இவ்வாறு திருப்பணிகள் விரைந்தும் செம்மையாக வும் நடைபெற்றுவந்தன.

அம்பிகை திருக்கோயிலை, தேவகோட்டை வள்ளல் சேவு மெய்யப்ப செட்டியார் அவர்கள் 2—5—1937ல் சலவைக் கல்லில் கருப்பக்கிரகம் செய்வித்தும் முன்மண்டபம் திருச்சுற்று மண்டபம் முதலியன கருங்கல் திருப்பணிகள் செய்வித்தும் அம்பிகை இராஜகோபுரம் புதியதாக எடுத்தும் திருப்பணி செய்துள்ளார்கள். இப்போதும் அம்பாள்கோயில் கோபுரம் விமானங்கள் வண்ணம் தீட்டப்பெற்று வனப்புறுத்தப்பெற்றன, இவ்வாறு திருப்பணிகள் பலவும் விரைந்து நடைபெற்று வந்தன.

குருமணி அவர்கள் திருப்பணி மகாகும்பாபிஷேகம் ஆகிய பணிகளைத் திருவுளத்து எண்ணியவாறே நிறைவேற்ற சென்னை சமயப்பிரசார நிலையவித்துவான் ஸ்ரீமத் சோமசுந்தரத்தம்பிரான் சுவாமிகள் அவர்களை இத்திருக்கோயில் கட்டளை விசாரணை யாக நியமித்து அங்கிருந்து அனைத்துப் பணிகளையும் கண் காணிக்குமாறு அருளாணை பிறப்பித்தார்கள். ஸ்ரீமத் சுவாமிகள் திருவாரூரில் அப்பர் பெருமானுக்குத் திருக்கோயில் கண்ட புண்ணியமுடையவர்கள். அப்பர் கயிலைக்காட்சி கண்டருளிய இத்தலத் திருப்பணிகளில் மிக மிக ஆர்வத்தோடு ஈடுபட்டார் கள். குருநாதனின் கட்டளையை மெய்வருத்தம் பாராது பசி நோக்காது கண் துஞ்சாது கருமமே கண்ணாக நினைப்பவர்கள். எல்லோரையும் இறைபணியில் ஈடுபடுத்தும் திறம் உடைய வர்கள். இரவு பகலாய் எல்லாத் திருப்பணிகளையும் அவ்வப் போது சென்று கண்டு செம்மையான முறையில் கண்காணித்து வந்தார்கள்.

எழுத்திலும் பேச்சிலும் :

குருமணி அவர்கள் திருவுள்ளம் கும்பாபிஷேகம் எப்போது நிகழ்த்துவது என்ற சிந்தனையையே செய்துவந்தது. தரிசிக்க வரும் அன்பர்களிடமெல்லாம் திருவையாறு கும்பாபிஷேகம் பற்றிய குறிப்பு இடையில் இடம் பெறுமலிருக்காது. ஐயாறு சென்று இறைவனுக்குச் சிறப்பு வழிபாடுகள் செய்து மீண்ட குருமணிஅவர்கள் ஒருநாள் ஆதீன சிவாகமவித்துவான் சிவஸ்ரீ சுவாமிநாத சிவாசாரியார் அவர்களை அழைத்து ஐயாற்றிறைவ னுக்குக்குடமுழுக்கு ஆட்டும்நாள் குறிப்பிடுமாறு பணித்தார்கள்.

சிவாசாரியார் 31—3—71 புதன்கிழமை காலை 9 மணிக்கு மகாகும்பாபிஷேகம் செய்யலாம் என்றவுடன் மகாசந்நிதானம் அவர்கள் திருமுகம் மலர்ந்தது. அருகிலிருந்தோர் முகங்களி லெல்லாம் கேள்விக்குறிகள் தோன்றின. இன்னும் சில மாதங்கள் தாமே உள்ளன. திருப்பணிகள் அனைத்தும் திருவுள்ளம்போல நிறைவேற வேண்டுமே என்ற கடமைக்கவலை தேவஸ் தானத்தில் உள்ளவர்களுக்கும் திருமடத்தில் உள்ள மேலாளர் அலுவலர் முதலியோர்க்கும் உண்டாயிற்று. அதனைக் குறிப்பா லறிந்த ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள் 'கவலைப்படாதீர்கள் கடமையைத் தொடர்ந்து செய்யுங்கள்' அவனுடைய கும்பாபி ஷேகம் அவனே நடத்திக்கொள்கின்ருன். நாம் செய்கின்றோம் என்ற நினைப்பை விடுங்கள் "முன்னவனே முன்னின்ருல் முடி யாத பொருள் உளவோ" என்று கூறினர்கள்.

திருவையாறு திருக்கோயில் பொருளாதாரத் துறையில் பெருந் திருப்பணிகளுக்கு இடமளிக்குமாறு இல்லை. எனவே ஆதீனத் திருக்கோயில்களிலிருந்து வேண்டும் தொகைகளை எடுத்துத் திருப்பணி வேலைகளுக்குப் பயன்படுத்த உத்தரவா யிற்று. விரைந்து கும்பாபிஷேகத் திட்டம் தீட்டப்பெற்றது.

**யாகசாலை :**

தருமை ஆதீனத் திருக்கோயில் மகாகும்பாபிஷேகங்கள், ஆண்டுதோறும் நவராத்திரி விழாவில் நடைபெறும் சதசண்டி ஹோமங்கள் ஆகியவற்றில் அமைக்கப்படும் யாகசாலையின் கைவண்ணங்களைக்கண்டு வியவாதவர் இரார். புதியதொரு மணி மண்டபம்தோன்றிநிற்பதுபோல யாகசாலை அமைக்கப்பெற்றது. மின்விளக்குகளால் அழகுறுத்தப்பெற்று அன்பர்களுக்குப் பெரு விருந்தாய்க் காட்சியளித்தது யாகசாலை. இராசகோபுரத்தை அடுத்த முதற் பிராகாரத்தில் பழனியாண்டவர் திருக்கோயில் முன்புறத்தில் சுவாமி அம்பாள் யாகசாலைகளும், திருமதிலை ஒட்டி இராஜகோபுரங்கள், பரிவார தெய்வங்களின் யாகசாலைகளும் அமைக்கப்பெற்றன. சுவாமி எழுந்தருளும் விமானம் விளா மிச்சைவேரால் அழகுறுத்தப்பெற்றது. சுவாமி பீடம் பஞ்சாசன பீடமாக அமைக்கப்பெற்றது. அம்பிகை எழுந்தருளும் பீடம் ஸ்ரீசக்கர மேரு வடிவமாக அமைக்கப்பெற்றது. நவகுண்டபக்ஷ வேள்விக் குண்டங்கள் இயற்றப்பெற்றன.

ஆறு கால யாக பூஜைகள் நடைபெறுமாறு திட்டங்கள் வகுக்கப்பெற்றுப் பத்திரிகை அச்சிடப்பெற்றது.

யாகசாலையில் பயன்படுத்தப்பெறும் சமித்து வகைகள் ஆகம முறைப்படி தயாரிக்கப்பெற்றுத் தனித்தனியேசேமிக்கப்பெற்றன.

முன்னேற்பாடுகள் :

கும்பாபிஷேகம் செய்வது என்றால் எளிமையான செயலா? என்ன? எத்தனை முன்னேற்பாடு செய்யவேண்டும்! பணியாளர்கள், விருந்தினர்கள், வேதசிவாகமத் திருமுறைப் பாராயணர்கள், சொற்பொழிவாளர்கள், காவல் துறையினர் முதலியோர் தங்கிப் பணிகள் செய்ய உணவு வசதிகள் உறையுள் முதலியன திட்டம் செய்யப்பெற்றன. எல்லாவகையான திட்டங்களையும் உடனுக்குடன் விரைந்து முடித்தனர்.

அம்பிகைசந்நிதியில் மகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளுவதற்கு ஏற்றவாறு கட்டிடம் பழுதுபார்த்துப் புதுப்பிக்கப்பெற்றது. ஐயாற்றில் உள்ள ஆதீனக் கட்டளை மடம் விருந்தினர் விடுதிகளில் வசதிகள் செய்யப்பெற்றன.

திருவையாற்று அரசர் கல்லூரி, தொடக்கப்பள்ளி முதலிய கட்டிடங்களை அவ்வத்துறையைச் சேர்ந்தவர்களும் உதவினர். எல்லோரும் தனித்தனியே உணவு முதலிய வசதிகள் பெற உணவுச் சீட்டுக்கள் வழங்குவதெனத் திட்டமிடப்பட்டது.

காவல்துறையினர் :

தஞ்சை மாவட்டக் காவல் துறை அதிகாரி திரு. ஐசக் தேவாரம் அவர்கள் மகாகும்பாபிஷேக விழா சிறப்புற நிகழவும் கூட்டத்தினரை ஒழுங்குசெய்யவும் காவல்துறையினர் ஐந்நூறுக்கு மேற்பட்டவரை அனுப்பி அடிக்கடித் தாமும் வந்து கண்காணித்தார்கள்.

தஞ்சை மாவட்ட ஆட்சித்துறைத் தலைவர் திரு. அந்தோனி அவர்கள் மகாகும்பாபிஷேகப் பணிகள் இனிது நிகழ எல்லா வகையான வசதிகளையும் செய்துதந்தார்கள்.

கும்பாபிஷேக விழாத் தொடக்கம் ;

22—3—71 திங்கட்கிழமை தனபூஜை, விக்னேஸ்வரபூஜையோடு தொடங்கிற்று. கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், வாஸ்துசாந்தி, மிருத்சங்கிரகணம், அங்குரார்ப்பணம் முதலியன சிறப்பாக நடைபெற்றன.

### கலாகர்ஷணம் :

இது கும்பாபிஷேகத்தில் முக்கியமான நிகழ்ச்சி. பிம்பத்திலும் ஸ்தம்பத்திலும் இருக்கும் மூர்த்திகளைக் கும்பத்தில் மந்திர பூர்வமாக எழுந்தருளச்செய்து மங்கள வாத்தியங்கள் வேத சிவாகமத் திருமுறைப் பாராயணங்கள் முதலியவற்றுடன் யாக சாலைக்கு எடுத்துவரும் நிகழ்ச்சி. 28—3—71 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு கலாகர்ஷண நிகழ்ச்சி நடைபெற்றது. கடங்கள் வலமாக யாகசாலைக்கு எழுந்தருளுவிக்கப்பெற்றன. மாலையில் யாகபூஜையின் முதற்கால நிகழ்ச்சி நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள் அன்பர்கள் புடைசூழ யாக கால தரிசனத்திற்கு எழுந்தருளி வழிபாடாற்றிச் சிறப்பித்தார்கள்.

### வேத சிவாகம பாராயணம் :

யாகசாலையில் வேத சிவாகம பாராயணங்களை விதிப்படி செய்யவும் யாகக் கிரியைகளை இயற்றவும் சிவாகமங்களில்வல்ல சிவாசாரியர்கள் நூறுபேர் வந்திருந்தனர். யாகசாலையில் பிரதம சிவாசாரியாராக இருந்து இயக்கியவர், தருமையாதீன வேத சிவாகம பாடசாலைத் தலைமையாசிரியர், சிவாகம வித்துவான், சிவாகமரத்னகரம், சிவஸ்ரீ. S. சுவாமிநாத சிவாசாரியார் அவர்கள் வேதங்களில்வல்ல அந்தணர்கள்பலரும் பங்குகொண்டனர்.

### திருமுறைப் பணி :

28—3—71 ஞாயிறு தொடங்கி 1—4—71 காலைவரையில் இடைவிடாது இரவும் பகலும் பன்னிருதிருமுறை அகண்ட பாராயணம் நடைபெற்றது. தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் திருமுறைப் பண்ணிசைவாணர்கள் நூற்றுக்கு மேற்பட்டவர்கள் கலந்துகொண்டனர். சிதம்பரம் சிவனடியார் திருக்கூட்டத்தினர் பன்னிரு திருமுறைப் பாராயணப் பணிசெய்தனர்.

### அஷ்டபந்தனம் :

29—3—71 திங்கட்கிழமை மாலை 4 மணி அளவில் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் திருக்கோயிலுக்கு எழுந்தருளி உடனிருந்து சுவாமி அம்பாள் முதலிய மூர்த்திகளுக்கும் பரிவார தெய்வங்களுக்கும் அஷ்டபந்தனம் சார்த்தச் செய்தார்கள். உடனிருந்த அன்பர்கள் பலரிடத்தும் நவரத்தினங்கள், பொற்காசுகள் முதலியன கொடுத்து பீடத்தில் இடச்செய்து மருந்து சார்த்தச்செய்தார்கள்.

**தெய்வீகக் கலைக்காட்சி :**

பழநியாண்டவர் மண்டபத்தில் தருமையாதீன வெளியீடு கள் திருக்கோயில் நிழற் படங்கள் தமிழகத்தின் சிறந்த தெய்வத் திருவுருவ நிழற்படங்கள் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானத்தின் திருக் கயிலாய யாத்திரைப் படங்கள் முதலியன காட்சியில் இடம் பெற்றன. புதுவை, புதைபொருளாராய்ச்சித்துறைப் பிரிவினர் படங்கள் பலவற்றைத் தந்து உதவினர். சென்னை சைவ சித் தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர், அறுபத்துமூவர், சமயாசாரியர் சந்தனாசாரியர் படங்கள் சிவதலங்களைப்பற்றிய சிறப்புக்கள் முதலியவற்றைக் கொண்ட கலைக்காட்சி ஒன்றை அமைத்தும் சமய நூல்களின் விற்பனையகம் ஒன்றைத் திறந்துவைத்தும் பணி செய்தார்கள்.

**பரிவார மகாகும்பாபிஷேகம் :**

30—3—71 செவ்வாய்க்கிழமை காலையில் பரிவார மூர்த்திகளின் யாகசாலைகளில் பூர்ணாகுதிகள் நடைபெற்றன. 8—30 மணிக்குத் தொடங்கி 1 மணி வரையில் பரிவார மூர்த்தி களின் மகாகும்பாபிஷேகம் நடைபெற்றது. ஸ்ரீமத் சோம சுந்தரத் தம்பிரான் சுவாமிகளும் உடனிருந்து பரிவார மகா கும்பாபிஷேகத்தைச் சிறப்புறச் செய்வித்தார்கள். கும்பாபிஷேக விழாவின் முன் நிகழ்ச்சியாக அன்பர்கள் பல்லாயிரவர் வழிபட இந்நிகழ்ச்சி நடைபெற்றது.


**வானொலியில் :**

அகில இந்திய வானொலியின் சென்னை, திருச்சி நிலையத் தினரும் இலங்கை வானொலி நிலையத்தினரும் கும்பாபிஷேக நிகழ்ச்சிகளை விசேட நிகழ்ச்சிகளாக ஒலி பரப்பினர். 30—3—71 இரவு 8—35 மணிக்கு. திருவையாற்றுச் சித்திரம் என்ற விசேஷ ஒலிபரப்பைச் செய்தனர். 31—3—71 காலை 8—45 மணிமுதல் மகாகும்பாபிஷேக விழா நிகழ்ச்சிகளை நேர்முக வருணனையாகச் செய்தனர். ஐயாற்று நிகழ்ச்சிகளை, அகக்கண்கொண்டு காண இந்நிகழ்ச்சிகள் பெரிதும் உதவின.

**அனுமதிச் சீட்டுகள் :**

குடமுழுக்குப் பெருவிழாவை யாதொரு குறைவும் இன்றி நடத்தவும், கூட்டத்தைக் கட்டுப்படுத்தவும் இறைபணியில் அன் பர்களை ஈடுபடுத்தவும் வாய்ப்பாகக் கும்பாபிஷேக தரிசனத்தை

திருவையாற்றில் :-



ஸ்ரீ உமாமகேஸ்வரர்

திருவையாற்றில் :-



ஆட்கொண்டார்



நந்திகேஸ்வரர்

திருவையாற்றில் :-



நந்திகேஸ்வரக் குழந்தை

மேல் தளங்களிலிருந்து காண விழைவோர்க்கு அனுமதிச் சீட்டுகள் அமைக்கப்பட்டிருந்தன.

## சிவபூசகர் மாநாடு :

தென் கயிலாயத் திருக்கோயிலில் வெளித் திருச்சுற்றில் 108 சிவனேயச் செல்வர்கள் சிவபூசை செய்தனர். சிதம்பரம், கூறை நாடு, காட்டுமன்னார்குடி முதலிய பல ஊர்களிலிருந்தும் வந்திருந்த சிவனடியார்கள் நாடோறும் காலை 7 மணிமுதல் சிவபூசைகள் செய்த காட்சி கண்களுக்கு இனிய காட்சியாக விளங்கிற்று.

காலை 10 மணிமுதல் சிவபூசகர்கள் மாநாடு நடைபெற்றது. சிவபூஜைத் தொடர்பான பல தலைப்புக்களில் சொற்பொழிவுகள் நடைபெற்றன.

## திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு :

சமயாசாரியர் நால்வர் பாடல்களை உடையதும் சந்தானாசாரியர்களின் முதற்குரவராகிய நந்தி தேவர் திருவவதாரம் செய்ததுமாகிய இத்தலத்தில் நிகழும் கும்பாபிஷேக விழாவில் சாத்திர தோத்திரங்கள் பற்றிய திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு மிகச் சிறப்பாக நடைபெற்றது.

தென்கயிலாயத்திற்கு எதிரே அமைக்கப்பட்ட திருநந்தி தேவர் திருக்காவணத்தில் மாநாடு நடைபெற்றது.

குன்றக்குடி, மதுரை, காஞ்சி ஆதீனங்களின் ஸ்ரீலஸ்ரீ மகா சந்நிதானங்கள், பேரூர் தவத்திரு இராமசாமி அடிகள், புதுவை ஆளுநர் மேதகு. ஜட்டி, உயர்நீதிமன்ற நீதிபதிகள் மாண்புமிகு. சதாசிவம், மாண்புமிகு. N. கிருஷ்ணசாமி ரெட்டியார், அறநிலைய ஆணையர் திரு. K. S. நரசிம்மன், திருமுருக கிருபானந்த வாரியார், பொள்ளாச்சி திரு. ந. மகாலிங்கம், திரு. கி. வா. ஜகந்நாதன், தஞ்சை மன்னர் மேதகு. இராஜாராம் ராஜா சாகேப், சிதம்பரம் திரு. கே. அரங்கசாமி பிள்ளை முதலியோர் கலந்து கொண்டனர். சொற்பொழிவுகள், பட்டிமண்டபம், நாட்டிய நாடகம், இன்னிசைக்கதை' முதலிய சிறப்பு நிகழ்ச்சிகளுடன் மாநாடு நடைபெற்றது. தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் பேருந்து கும்பாபிஷேக விழாவிற்குரிய பணிகளில் ஈடுபட்டது.

( தொடரும் )

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்
குருபாதம்

# புத்தாண்டு வாழ்த்து

வி. சா கு.

சித்திரைப் பாவை சிரித்த முகத்தொடு
இத்தரை வாழ எழுந்தருள் கின்றாள்
மழைவளம் பெருகவும் மாநிலம் செழிக்கவும்
விளைபொருள் பல்கவும் விலைகள் குறையவும்
போர்வெறி தணியவும் பூசல்கள் ஒழியவும்
அன்பு தழைக்கவும் அமைதி பூக்கவும்
இன்பம் கொழிக்கவும் ஏர்வளம் செழிக்கவும்
நன்மைகள் விளைத்து நம்மைக் காத்திடும்
கடவுளை மறவாது கருத்துட் போற்றவும்
அறநெறி பரவவும் ஆலயம் சிறக்கவும்
மறநெறி தவிரவும் மனங்கள் திருந்தவும்
செந்தமிழ் வாழவும் செல்வம் பெருகவும்
மங்கலம் கூறி மகிழ்ந்துபுத் தாண்டை
வருக வருகஎன வரவேற் போமே.

திருவையாறு மகாகும்பாபிஷேக விழாவில்
வழங்கிய

# வாழ்த்துரைகள்

தருமையாதீனம்

## ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணி அவர்கள்

அன்பர்களே !

இன்று ஒருசிறந்த பொன்னுள் ! ஆண்டவனுடைய திருக் கோயிலைத் திருப்பணி செய்து பழுதுபார்த்துக் குடமுழுக் காட்டும் நல்ல நாள்- ஆலயங்களைச் செம்மையாகப் பரிபா லித்து வந்தால்தான் உலகத்திலே மக்கள்செம்மையாக வாழ முடியும். மனிதன் செம்மையாக வாழ்வாங்கு வாழவேண்டுமே யானல் ஆண்டவனுடைய கோயில்களை 12 ஆண்டுகளுக்கு ஒருமுறையேனும் புதுப்பித்துத் திருப்பணிகள் செய்ய வேண்டும். அந்தத் திருப்பணிகளைச் செய்தால்தான் நாடு செழிக்கும், மக்கள் நல்வாழ்வு வாழ்வர், சமுதாயம் வாழும். தெய்வ நம்பிக்கையை அடிப்படையாகக் கொண்டால்தான் மனிதன் வாழ முடியும். தெய்வப்பால் குடித்த குழந்தை ஞான சம்பந்தப் பெருமான். அவர்போல, நாமெல்லாம் வாழ்வதற்கு 'புண்ணியப் பதினறு ஆண்டு எய்திடும் புகலி வேந்தர் கண் ணுதல் கருணைவெள்ளம் ஆயிரம் முகத்தால் கண்டார்" என்று சேக்கிழார்சுவாமிகள் சொல்லுகின்றபடி நல்லவழி யிலே அறநெறியிலே பெரியார்களுடைய துணைக்கொண்டு நாமெல்லாம் வாழ வேண்டுமேயானல் நம்நாட்டிலே ஆலயங் களெல்லாம் செம்மையான முறையிலே பரிபாலிக்கப்பட வேண்டும்.

ஐயாறப்பன் திருவடிகளைச் சிந்திப்போமே யானல், பழவினைதீரும் பரகதி கிடைக்கும் என்றபடி ''சிந்திப்பரியன சிந்திப்பவர்க்குச் சிறந்து செந்தேன் முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்திருண்டு பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்பு சுற்றி அந்திப்பிறையணிந் தாடும் ஐயாறன் அடித்தலமே,''. ஆண்டவனுடைய திருவடி அடைந்தால் நமக்கு எல்லாச் செல்வங்களும் கிடைக்கும். இந்த மகாகும்பா

பிஷேகத்திலே பல மகாசந்நிதானங்கள், உயர்நீதிமன்ற நியாயாதிபதிகள், நமது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய புதுவை ஆளுநர், ஜட்டி அவர்கள் மற்றும் அன்பர்கள் எல்லோரும் கலந்துகொண்டுள்ளனர். நல்லமுறையிலே மகாகும்பாபிஷேகம் நடந்தேறியது. அன்பர்கள் எல்லோரும் ஐயாறப்பன் திருவருளைப்பெற்று என்றும் சிரஞ்சீவியாக தெய்வபக்தி உள்ளாக சீலர்களாகவாழ ஐயாறப்பன் திருவடிகளைப் பலமுறை வணங்குகின்றோம்.

Extract from the message
on the eve of the Mahakumbabishekam conveyed
by

SRI B. D JETTI B. A., LL. B.
Lt. Governor of Pondichery on 31—3—71.

On the invitation of His Holiness the Kailai Gurumahasannidhanam of Dharmapuram Adhinam, I got an opportunity of participating in this Mahakumbabishekam. This kumbabishekam is arranged so nicely by His Holiness that all people who have come to see the Kumbabishekam are happy and are able to witness the function without any difficulty. I am sure that in participating in the Kumbabishegam people would have developed their belief in God, the Supreme and belief in their religion. This will one way help to promote the faith in them to a great extent by the attraction in arranging such a great Kumbabishekam. By the presence of all Mahasannidhanams of our land, I am sure our people will be impressed with the devotion to God and I am sure our country will be prosperous and our people will have better future.

Thank you. Respects to all Mahasannidhanams.

### தமிழ்நாடு உயர் நீதிமன்ற நீதிபதி
## மாண்புமிகு ஆர். சதாசிவம் B. A.. M. L., அவர்கள்

இறைவன் திருவருளால் இன்று மகாகும்பாபிஷேகம் நல்லமுறையில் நடைபெற்றது. ஐயாறப்பன் அருளாலும். இங்கு வீற்றிருக்கும் அறம்வளர்த்த நாயகியின் அருளாலும் நாட்டில்நீதிநெறி நன்ருகத் தழைத்தோங்கும்படி அருள்புரியப் பிரார்த்திக்கிறேன்.

### தமிழ்நாடு உயர் நீதிமன்ற நீதிபதி
## மாண்புமிகு N. கிருஷ்ணசாமி ரெட்டியார்
B. A., B. L., அவர்கள்

கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களுடைய ஆட்சியின் கீழிருக்கும் தென் கயிலாயம் என்று போற்றப்படும் இத் திருக் கோயிலில் இன்றையதினம் வெகு விமரிசையாக கும்பாபி ஷேகம் நடைபெற்றது. 2, 3 லட்சம் ஜனங்களுக்கு மேலாக திரள் திரளாக வந்து அனுபவித்தார்கள். இந்த நாட்டுக்கு அமைதி வேண்டுமென்ருல் இறையுணர்வு ஏற்படவேண்டும். இறையுணர்வு ஏற்பட்டால்தான் நாடு அமைதியாக வாழமுடியும். இன்று இங்குவந்த ஆர்வமுள்ள கூட்டத்தைக் கண்டவுடன் எனக்கு உண்மையிலேயே பக்தி பெருகுகின்றது. நாட்டில் பக்தி உணர்வு பெருகிக்கொண்டே இருக்கிறது என்ற உண்மையான ஒரு நம்பிக்கை எனக்கிருக்கின்றது. இந்தக் கும்பாபிஷேகம் நல்லமுறையிலே நடைபெற்றதற்குக் காரணமாக இருந்த, குருமகா சந்நிதானம் அவர்களுக்கு என்னுடைய நன்றியும், எல்லாருடைய நன்றியும் உரித்தாகுக என்று உங்களை எல்லாம் வாழ்த்துகின்றேன்.

### தமிழ்நாடு அறநிலையத்துறை ஆணையர்
## திரு. K. S. நரசிம்மன் B. A., B. L., I. A. S. அவர்கள்

ஆற்றரு நோய்மிக்கு அவனி மழையின்றி
போற்றரு மன்னரும் போர்வலி குன்றுவர்
கூற்றுதைத் தான்திருக் கோயில்கள் எல்லாம்
சாற்றிய பூசைகள் தப்பிடில் தானே.

முன்னவனூர் கோயில் பூசைகள் முட்டிடில்
மன்னர்க்குத் தீங்குள வாரி வளம் குன்றும்
கன்னங் களவு மிகுத்திடும் காசினி
என்னரு நந்தி எடுத்துரைத் தானே.

என்பது திருமூலருடைய வாக்கு. நாமெல்லாம் சௌக்கியமாக இருக்கவேண்டும், ஆட்சி சௌக்கியமாக இருக்கவேண்டும் என்றால் நம்முடைய ஆண்டவன் திருக்கோயில்கள் எல்லாம் நன்றாக வளரவேண்டும். நம்முடைய தமிழகத்திலே எல்லாருமே நன்றாக-சந்தோஷமாக இருக்கின்றோம்! அதற்குக் காரணம் நம்முடைய திருக்கோயில்கள் எல்லாம் நன்றாக இயங்குகின்றன. ஆகவேதான் நாமெல்லாம் அமைதியாக இங்கே வாழ்ந்து வருகின்றோம். இப்பேர்ப்பட்ட நல்ல விழாவை நம்முடைய தருமபுரம் குருமகாசந்நிதானம் அவர்கள் நன்றாக நடத்தினார்கள். அவர்களுடைய அருளாட்சியிலே இதைப் போன்ற பலப்பல திருப்பணிகளை எல்லாம் செய்து முடித்துவிட்டார்கள். ஏறக்குறைய 27 கோயில்களிலே எல்லாக் கோயில்களையும் திருப்பணி செய்து விட்டார்கள் அவர்களுடைய அருளாட்சியிலே மேலும் மேலும் நம்முடைய திருக்கோயில்களெல்லாம் இயங்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டு ஆண்டவன் அருள் பூரணமாக அவர்களுக்கு இருக்கவேண்டும். அவர்களுடைய அருளாட்சி மிகவும் பெருகவேண்டும். இந்தத் திருக்கோயில்களெல்லாம் நன்றாக இயங்கவேண்டும். நன்றாக இயங்கி நாமெல்லாம் சுகம்பெறவேண்டும் என்று ஆண்டவனைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

## மதுரை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானம் அவர்கள்

மெய்யன்பர்களே!

உலகத்திலே[1] இந்த மண்ணுலகிலே நாம் நல்ல வாழ்வு வாழவேண்டுமென்றால் ஆண்டவனுடைய திருவருள் வேண்டும். ஆண்டவன்தான் நமக்கு உடம்பு கொடுக்கின்றான். ஆண்டவன்தான் நமக்குப் பெயரிடுகின்றான்! ஆண்டவன்தான் நாம் பிறந்தபிற்பாடு வாழ்வதற்கு வேண்டிய போகப் பொருள்கள் எல்லாம், நீர், நிலம், விளைபொருள். சூரியன், காற்று எல்லாம்கொடுத்துஉதவுகின்றான். நாம் நன்றிமறக்கக்கூடாது.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு' என்று வள்ளுவர் சொல்லு கின்றார். மக்கள் உதவியைவிட ஆண்டவனுடைய பேருதவியில் தான் நாம் இந்த உலகத்தில் வாழ்வது. இந்த உலகத்தை விட்டுப்போவது எல்லாம் அவன்சாதனையிலே இருப்பதனாலே நல்ல வாழ்வு வாழவேண்டுமென்றால் ஆண்டவனைத் தொழ வேண்டும். இந்த கும்பாபிஷேகங்களெல்லாம் அடிக்கடி நடப்பதனாலே பலவருஷங்கள் சேவிக்கின்றபலனை நாம் இந்தச் சேவையினாலே பெற்றுவிடலாம் என்று முன்னோர்கள் எண்ணியிருக்கிறார்கள், இந்த கும்பாபிஷேகமானது நம்மு டைய தருமையாதீனம் குருமகாசந்நிதானம் அவர்கள் ஆட்சி யிலே இருக்கக் கூடிய கோயில்களிலே எல்லாக் கோயில்களி லும் செம்மையாக நடத்தப்பெறுகின்றது. அதிலே அவர்கள் மிகவும் ஆர்வம் காட்டுகிறார்கள். அவர்கள் காட்டுகிறதை நாம்பின்பற்றி ஆண்டவனைத் தினமும் காலையிலும் மாலையிலும் தொழுது நல்வாழ்வு வாழ்வோமாக. அதற்கு ஐயாறப்பன் அருள்புரிவானாக!

## திருமதி. சௌந்திரா கைலாசம் அவர்கள்

ஆதியும் அந்தமு மில்லாத அரும்பெருஞ் சோதியை நினை வூட்டி நெஞ்சிலே உணர்வுஊட்டி நிமிர்ந்துநிற்பவை கோயில் களும் கோபுரங்களும்! ஆத்தாளை எங்கள் அபிராமவல்லியை அண்டமெல்லாம் பூத்தாளை, மாதுளம்பூ நிறத்தாளை, புவி யடங்கக் காத்தாளை இன்று கண்குளிர இனிய ஆயிரக்கணக் கான பக்தர்கள் கண்டு களிக்கின்ற காட்சியை, கசிந்துருகிக் கண்ணீர்மல்கி நிற்கின்ற காட்சியை, காணாத கண் என்ன கண்ணே என்று சொல்லுகின்ற அளவிலே அன்னையின் அருளும் ஐயனின் அருளும் ஐயாற்றிலே ஆறாருகப் பெருகி ஓடுகின்ற காட்சியினை நாம் காண்கின்றோம்.

இன்று இங்கு ஐயாறு என்ற பெயர்மாறி ஆறாறு என்று சொல்லுகின்ற அளவிற்குப் பக்தி வெள்ளம் பாய்ந்தோடக் காண்கின்றேன் ஆறாறு என்று சொல்லுகின்ற பொழுது ஆறாறு முப்பத்தாறு தத்துவங்களும் நிறைந்து விளங்குகின்ற காட்சியினை இங்குக் காணுகின்றேன். கயிலைக் குருமகா சந்நிதானம் அவர்கள் அருளாட்சியிலே நடைபெறுகின்ற

இந்தக் கோயிலின் திருஆட்சி மிக அற்புதமான முறையில் நடைபெற்று பக்தர்கள் அத்தனைபேரும் அன்னையின் அருளை யும், ஐயனின் அருளையும் வாரிவாரி வழங்குகிற வகையிலே அள்ளிச்செல்லுகிற காட்சியையும் காண்கின்றேன். கயிலைக்குரு சந்நிதானம் அவர்கள் ஆட்சியிலே உள்ள 27 கோயில்களும் 27 நட்சத்திரங்களாகக் காட்சி தருகின்றன. 27 கோயில்களும் 27 நட்சத்திரங்களாகவும், கயிலைக் குருமணி அவர்களை நில வாகவும் காணுகிறேன். சந்திரனின் நிலவின் கீழே இருக்கின்ற 27 நட்சத்திரங்களும் ஒளிவிட்டுப் பிரகாசிக்கின்ற முறையில் இன்று இந்த ஐயாறப்பன் கோயிலிலே அருமையான கும்பா பிஷேக விழா நடைபெற்று ஆஸ்தீகப் பெருமக்களுடைய உள்ளம் குளிர்கின்ற முறையிலே நடைபெறுவதைக் காணு கின்றபொழுது இந்நாட்டு மக்களின் உள்ளத்திலேயும் வெளியிலேயும் மகிழ்ச்சியும் ஆனந்தமும் நிரம்பி வழிய அன்னை பராசக்தி அருள்புரிய வேண்டுகிறேன்.

## தவத்திரு. குன்றக்குடி அடிகளார் அவர்கள்

சிந்திப் பரியன சிந்திப் பவர்க்குச் சிறந்துசெந்தேன்
முந்திப் பொழிவன முத்தி கொடுப்பன மொய்த்திருண்டு
பந்தித்து நின்ற பழவினை தீர்ப்பன பாம்புசுற்றி
அந்திப் பிறையணிந்து ஆடும் ஐயாறன் அடித்தலமே.

என்று அப்பரடிகள் அகங்குளிர நினைந்து நினைந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து பாடிய இந்தத் திருத்தலத்தில் தென் கயிலாயத்தில் கயிலைக் குருமணியாக - கமலையும் தருமையும் - விரிதமிழ்க் கூடலும் திருநகராக அரசு வீற்றிருந்தருளும் குருமணியவர்கள் கயிலாயத்திற்கே திருமுழுக்குச் செய்வது இந்த பிறப்பில் நாம் காணும் நற்பேறு. இந்தப் பேறுஎன்றும் கிடைக்கப் பலபிறவிகள் எடுத்தாலும் அது பயனுடையதாகும். ஐயாறப்பன் திருவடிகள் போற்றி! இதைக் கயிலையாக்கிய அப்ப ரடிகளின் நெஞ்சுரமும், திருவருள் திறமும் போற்றி! போற்றி! இதனை இன்றைக்குத் திருவருள் கோலத்தோடு புதுப்பித்து திருவருட்பொலிவு எழுந்தருளச்செய்த கயிலைக் குருமணி அவர்களின் அருளாட்சி போற்றி! போற்றி!!

# ஸ்ரீமத். சோமசுந்தரத் தம்பிரான் சுவாமிகள்

களித்துக் கலந்ததொர் காதற் கசிவொடு காவிரிவாய்க்
குளித்துத் தொழுதுமுன் னின்றவிப் பத்தரைக் கோதில்செந்
தெளித்துச் சுவைஅமு தூட்டி அமரர்கள் சூழிருப்ப [தேன்
அளித்துப் பெருஞ்செல்வம் ஆக்குமை யாறன் அடித்தலமே.

ஐயாறன் அடித்தலம் அனைவரையும் செல்வந்தர்களாக ஆக்குகின்றது. ஆனால் பக்தர்களைத் தினந்தோறும் காலையில் நீராடி இறைவனை வழிபடுகின்ற அன்பர்களைப் பெருஞ்செல்வர்களாக ஆக்குகின்றது என்கின்ற நிலையை அப்பர்பெருமான் ஆசீர்வாதமாக 1300 ஆண்டுகளுக்கு முன்னரே நமக்கு அருளியிருக்கிறார். அதே ஆசீர்வாதம் அப்பர் பெருமானுடைய ஆசிர்வாதமாக கும்பாபிஷேகத்தை நடத்தி வைத்த கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்கள் உலகமக்கள் அனைவருக்கும் தமிழகத்துப் பொதுமக்கள், பெருமக்கள், அனைவருக்கும் வாழ்த்துகிறார்கள் என்பதை உளமார உங்களுக்குத் தெரிவித்துக் கயிலைக் குருமகாசந்நிதானமவர்கள் ஆட்சிக்கு - அருளாட்சிக்கு ஞானபீடம் ஏறி 25 ஆண்டுகள் ஆனபிறகு முதல்முதலாகப் பெருங் கும்பாபிஷேகமாகச் செய்வது இது தான் முதல் என்பதை மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்ளுகிறேன். கயிலைகண்ட குருமணி அவர்கள் கயிலாயத் தலமாக இருக்கின்ற இத் திருவையாற்றில் கும்பாபிஷேகம் செய்வது மிகவும் பொருத்தமானது

இத் தலத்தில் அப்பருக்குக் கயிலைக்காட்சி கொடுத்தான் ஐயாறப்பன். அதேபோல அதே ஆடி அமாவாசையில் நமது கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களும் சுமார் 9 ஆண்டுகளுக்கு முன்னே கயிலாயக் காட்சியை ஆடி அமாவாசையில் கண்டு களித்தார்கள். அவர்களுடைய அருளாட்சியிலே அவர்கள் ஞானபீடமேறி வெள்ளிவிழாக் கண்டு இப்போது இருபத்தேழு கோயில்களையும் கும்பாபிஷேகம் குடமுழுக்குப் பெருவிழா செய்தாலும் வெள்ளிவிழாக் கொண்டபிறகு முதல் பெருங் கும்பாபிஷேகமாக இவ்விழாவினைச் சிறப்பாகக் கொண்டாடியிருக்கிறார்கள். அவர்கள் நீடூழி வாழ வேண்டுமென்று திருவருளை எண்ணி நான் வாழ்த்துகின்றேன், வணங்குகின்றேன். வணக்கம்.

# செய்திகள்

***சீகாழியில் :***

## ஆலயத் தூய்மைப் பரிசளிப்புவிழா

தமிழ்நாடு இந்துசமய அறநிலையத்துறையினர் கோயில்கள் நல்லமுறையில் பரிபாலிக்கப்படவேண்டும், தூய்மையாக வைக்கப்பட வேண்டும் என்ற கருத்தில் தூய்மையாக வைப்பதோடு, நல்ல முறையிலும் பரிபாலிக்கப்படும் திருக்கோயிலுக்குப் பரிசளிக்கும் திட்டமொன்று ஏற்படுத்தியிருப்பதும், அப்பரிசு தருமை ஆதீன ஆட்சியிலுள்ள திருக்கடவூர் ஸ்ரீ அமிர்தகடேசுவரப் பெருமான் திருக்கோயிலுக்குக் கிடைத்தது என்பது அனைவரும் அறிந்தது.

தஞ்சாவூர், இந்து சமய அறநிலைய ஆட்சித்துறைத் துணை ஆணையர் ஆளுகைக்குட்பட்ட ஆலயங்களுள் சீகாழி தாலுகாவில் தருமையாதீனத்தைச் சேர்ந்த சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி ஆலயம் மிகவும் தூய்மையாகவும், நல்ல முறையிலும் வைக்கப்பட்டுள்ள ஆலயம் என, சென்னை இந்து சமய அறநிலைய ஆட்சித்துறை ஆணையர் அவர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான இருபத்தேழு திருக்கோயில்களுள் சீகாழி ஸ்ரீ சட்டைநாதசுவாமி தேவஸ்தானம் ஒன்ருகத் திகழ்வது.

இத்திருக்கோயிலில் ஆலயத் தூய்மைப் பரிசளிப்புவிழா 8—4—71 வியாழக்கிழமை மாலை 7 மணி அளவில், திருமுறைப் பாராயணத்தோடு தொடங்கியது. சென்னை இந்து சமய அறநிலைய ஆணையர் உயர்திரு. கே. எஸ். நரசிம்மன் பி. ஏ., பி. எல். ஐ. ஏ. எஸ். அவர்கள் சுழற்கோப்பையையும், நிரந்தரக் கோப்பையையும் கட்டளைவிசாரணை வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள் அவர்களிடம் வழங்கினர்கள். சிதம்பரம் அறப்பணிசெல்வர் டாக்டர், திரு. கே. அரங்கசாமி பிள்ளை எம். பி., பி. எஸ். அவர்கள் சுழற்கோப்பை வழங்கியதையும் ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமணியின் ஆட்சித்திறத்தையும் பாராட்டிப் பேசினர்கள். நாகப்பட்டினம் துணை ஆணையர், திரு. புலியூருடையான் அவர்களும் மற்றும் பலரும் விழாவில் கலந்து

கொண்டார்கள். விழாவிற்கு வத்திருந்த அனைவரையும், தஞ்சை துணை ஆணையர், திரு. வி. எஸ்.கோதண்டபாணி பி. எஸ்ஸி., பி. எல். அவர்கள் வரவேற்றுப்பேசினர்கள் கட்டளை விசாரணை தம்பிரான் சுவாமிகள் நன்றிநவின்றபின் கடவுள் வாழ்த்தோடு விழா இனிதுநிறைவுற்றது.

**திருபுவனத்தில் :**

## பங்குனி உத்திரப் பெருவிழா

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருபுவனம் ஸ்ரீ கம்பகரேசுவரசுவாமி தேவஸ்தானத்தில் பங்குனி உத்திரப் பெருவிழா 31—3—71 புதன்கிழமையன்று தொடங்கி 9—4—71 வெள்ளிக்கிழமையன்று நிறைவுற்றது. 4—4—71 ஞாயிற்றுக்கிழமை பெருமான் தன்னைத்தான் அர்ச்சித்தலும், அன்று இடபவாகனக் காட்சியும். 6—4—71 செவ்வாய்க்கிழமை திருக்கல்யாணமும், 8—4—71 வியாழக்கிழமை திருத்தேர்த் திருவிழாவும், 9—4—71வெள்ளிக்கிழமை கொடியிறக்கமும் நடைபெற்றது. விழாவை முன்னிட்டு சமயச் சொற்பொழிவுகளும் நடைபெற்றன.

2—4—71 வெள்ளிக்கிழமை மகாவித்துவான், திரு சி. அருணைவடிவேல் முதலியார் ஞானத்தமிழ் என்ற தலைப்பிலும். 4—4—71 ஞாயிற்றுக்கிழமை வித்துவான், சிரோமணி, திரு வி, சபேசன், சுந்தரர் செந்தமிழ் என்ற தலைப்பிலும், 6—4—71 செவ்வாய்க்கிழமை செஞ்சொற்கொண்டல், வித்துவான் திரு. சொ. சிங்காரவேலனுர் மணிவார்த்தை என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றினர்கள்.

அன்பர்கள் பலர்வந்து கேட்டு மகிழ்ந்தனர்.

---

## சொக்கநாத வெண்பா

ஆரிடத்தில் வந்தும் அடியேன் உளத்திருந்தும்
ஓரிடத்தில் உற்பவித்தும் உள்ளபடி — பாரிடத்தில்
நாயேன் உளமகிழ நன்ரு உணர்த்திடுவாய்
தாயேநீ சொக்கநா தா. 15

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக சுவாமிகள்

# எதிர்காலம்

ஜோதிஷார்ணவம்

திரு. K. முத்துஜோதிடர்

## ஸ்ரீ விரோதிகிருது வருஷத்திய ஜகஜ்ஜாதகம்

சாதாரண வருஷம் பங்குனி மாதம் 30ந் தேதி மங்கள வாரம் அனுஷ நக்ஷத்திரம் முதல்பாதமும் வியதீபாதயோகமும் உதையாதி 52 நாழி 49 விநடி அளவிலும், கும்பலக்னத்தில் ஸ்ரீ லோக ரக்ஷகரான சூரியபகவான் மீனராசியிலிருந்து மேஷ ராசிக்கு சித்திரைமாதபிறப்பு முகூர்த்தமாக சுபவேளையில் பிரவேசம் செய்கிறார். பிரவேசகாலலக்கினம் கும்பம்.

ராஜா — சனி. மந்திரி — புதன்.
சேனாதிபதி — செவ்வாய் அர்க்காதிபதி — செவ்வாய்
ஸஸ்யாதிபதி — சனி தான்யாதிபதி — குரு
ரஸாதிபதி — சந்திரன் நீரசாதிபதி — சுக்கிரன்
மேகாதிபதி — செவ்வாய்.

| | | | |
|---|---|---|---|
| புதன் | சூரியன் / சனி | | |
| ல / சுக் | ஜகஜ்ஜாதக சாரம் | | |
| ராகு | | | |
| செவ்வாய் | குரு / சந்திரன் | | |

விரோதிகிருது வருஷத்திய ஜகஜ்ஜாதக பலன் ஷை வருஷா ரம்பத்தன்று உலக ஜாதகப்படி மேஷராசியில் ஸ்ரீ லோகரக்ஷக ரான சூரியபகவான் கும்பலக்கினத்தில் விடியற்காலத்தில்

பிரவேசம் செய்கிறார். அந்தசமயத்தில் 1ல் சுக்கிரன், 2ல் புதன் 9ல் சனி பார்வை, 3ல் சனி பிரவேசகால லக்னாதிபதி சஞ்சாரம். 10ல் குரு சந்திரன் அமைந்தபடியால் பாரத பூமியில் தக்ஷிண பிரதேசத்தில் மாதமும்மாரி பெய்துகொண்டும் நீர்த்தேக்கங்கள் கொஞ்சம் கொஞ்சமாய் நிரம்பிக்கொண்டும் முதல் போகம் சாகுபடி சிறந்த முறையில் நடந்துகொண்டும், உணவுப் பொருள்கள், நஞ்சை புஞ்சை தான்யங்கள், விசேஷமாய் விருத்தியாகிக்கொண்டும், அடிக்கடி மேக கர்ஜ்ஜனைகளுடன் விட்டு விட்டு கண்டம் கண்டமாய் மழை பெய்துகொண்டும் விலை வாசிகள் குறைந்துகொண்டும் பிரஜைகள் ஆரோக்கியத்துடனும் சந்தோஷத்துடனும் வாழ்க்கையை நடத்திக்கொண்டு சுகமடை வார்கள். ஷ பலன்கள் தர்மபூமிகளில் விசேஷ நன்மை தரும். பிற்பாதியிலும் மேற்கண்டவிதமாகவே சீரானமழையும், வெள்ளப் பெருக்கு இல்லாமல் நிதானமாயும், உற்பாதங்கள் பெருங்காற்று அனாவ்ருஷ்டி பயம் இல்லாமலும் இருந்துவரும். சஸ்ய தான்ய விருத்திகள் ஏற்படும்.

குறிப்பு :- ஷ வருஷத்தில் ராஜா, சனிபகவான். அவ ருக்கே சஸ்யாதி பத்தியம் இரண்டும் ஏற்பட்டு, வருஷாரம்ப சமயத்தில் நீசராசியில் சஞ்சாரமும், அவருக்கு 8 ல் குரு தான்யாதிபத்தியம் கிடைத்து, ஷஷ்டாதிபதி சந்திரனோடு சேர்ந்து விருச்சிக ராசியில் சஞ்சாரமும், மந்திரி புதன், ராஜா வுக்கு ,12 ல் மீனராசியில், நீசமும் அடைந்தபடியாலும் சந்திரன், ஷஷ்டாதிபதியோடு ரசாதிபதியுமாகி, அவரும் நீசராசியில் அமைந்தபடியாலும் உலகில் வடரங்கம் (திருப்பதி) க்கு வட தேசமும் கடல்கடந்த பல தேசங்களிலும், அமைதி குறைவாலும் துர்பிக்ஷத்தாலும் யுத்தமேகம் பிரண்டோடிக்கொண்டும், துர் ஜனங்களின் விருத்தியும், மனுஷ்ய சுபாவமெல்லாம் மாறி (ஆகாரம், நித்திரை, பயம், சங்கமம்) இந்த நான்கு குணங்க ளிலும் மிருகதுல்யமாகி சஜ்ஜனங்கள் சாதுக்கள் பக்தாள் ஆஸ்தி கர்கள், பதிவிருதை, ஸ்திரீகள், இவர்கள் விஷயத்திலும், தேவாலய தர்ம ஸ்தாபனங்களிலும் சகல போகங்களிலும் சமான பலமடைந்து க்ஷீணகதியையும் பிராசீன தர்மாசரணங்களையும், அறவே விட்டுவிடும்படியான பயத்தையும் உண்டுபண்ணும் உலகில் எங்கேயோ ஒரு புண்ணிய புருஷாள் சாக்த வித்தையை உபாசிப்பவர்கள் இருப்பதாலும் வேதாகம புராண தர்ம சாஸ்திரங்களை விடாமல் நடத்தியவர்களும், பக்தர்களாலும், பயம் நிவர்த்தியாகி உலகம் பூராவும் சாந்தி அடைந்து சுபிக்ஷத் தோடு விளங்கும். கடவுள் மறைவாய் இருந்துகொண்டு சற்று மெதுவாகப் பலனளிப்பார். சாதுக்கள் பக்தர்கள் தர்ம பூமிகள் ரக்ஷிக்கப்படும். சுபமுண்டாகும். சுபம்,

(விரோதிகிருதுஹூ சித்திரைமீ 1உ முதல் 31உ முடிய)

(14—4—71 முதல் 14—5—71 முடிய)

**1. மேஷம் – அசுவதி – பரணி – கார்த்திகை ¼**

மேஷராசி பூர்ண சுபமாகும். அதில் பரணியும், கார்த்திகை முதல் பாதமும் சுவல்பமாகவே பலன் தரும். மற்றவைகள் சுக ஜீவனத்தையும், மேல் பதவிகளையும், ஆரோக்கியத்தையும் தரும். புதன், வியாழன் சுபமாகும்.

**2. ரிஷபம் – கார்த்திகை ¾ – ரோஹிணி – மிருகசீர்ஷம் ½**

விருஷபராசி 9 பாதங்களும் விசேஷ சௌக்கியத்தைத்தரும். இடம் மாறலுடன் விசேஷ மேன்மையும், பொருளாதார சௌக்கியமும் ஏற்படச்செய்யும். மேலோர் பெரியோர்களின் அன்பினல் அசாத்தியமெல்லாம் சுலப சாத்தியமாகும். கீர்த்திபத்திரம்தரும். உலக வியாபகம் ஏற்படும். வெள்ளி, சனி சுபமாகும்.

**3. மிதுனம் – மிருகசீர்ஷம் ½ – திருவாதிரை–புனர்பூசம் ¾**

மிதுனராசி பலன் மிசிரமாகும். வித்யாவிருத்தியில் தவக்கம் காட்டும். வரவு செலவு சமனகும். சத்துருபாதையும், வியவகார பயமும் உண்டுபண்ணும். மனம் சாந்தியடையாமல் இருந்துகொண்டு மாதக் கடைசியில் எதிர்பாராத விதமாய் நினைத்த காரியங்கள் கைகூடும். தெய்வபலம் காக்கும் என்பது அப்போது தான் தெரியும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

**4. கடகம் – புனர்பூசம் ¼ – பூசம் – ஆயில்யம்.**

கடக ராசி 9 பாதங்களும் பூரண சுபமாகும். குடும்பத்தில் சுபாதிகள் நடக்கும். விசேஷ லாபம் தரும். நூதனமுறையில் வியவசாயம் ஓங்கும். தான தர்ம பிரதிஷ்டைகளும், உலகில் விசேஷ மதிப்பும் உண்டுபண்ணும். கீர்த்திப் பத்திரம் தரும். களத்திர புத்திராதிகளால் சந்தோஷம் தரும். செவ்வாய், புதன் சுபமாகும்.

**5. சிம்மம் – மகம் – பூரம் – உத்திரம் ¼.**

சிம்ம ராசி மிசிர பலனகும். அதிக விரயம் காட்டும். உழைப்பு அதிகத்துடன் ஜீவன விருத்தியாகும். வியாதி நீங்கி ஆரோக்கியம் தரும். மேலோர் பெரியோர்களின் ஆசியாலும், தெய்வபலத்தாலும் சகலமும் சாத்தியமாகும். வியாழன், வெள்ளி சுபமாகும்.

## 6. கன்னி – உத்திரம் $\frac{3}{4}$ – ஹஸ்தம் – சித்திரை $\frac{1}{2}$.

கன்னியா ராசி பூராவும் சுப பலனைத்தரும். ஆரோக்கியம் உண்டாகும். யஞ்ஞயாகாதி பலன்களையும், நஷ்டதனப் பிராப்தியையும் தரும். உலகப் பிரசித்தியும், கீர்த்திப் பத்திரமும், தெய்வீகத் தோற்றமும் ஏற்படச்செய்யும். ஸ்தாவர ஜங்கமங்களின் கிரயவிக்கிரயபலனையும், அடிக்கடிசஞ்சாரத்தையும், இல்லறசுகத்தையும் தரும். சமான புருஷாளின் சேர்க்கையால் அநேகம் அற்புதங்களைக் காட்டும். தெய்வ பலம் முன்நிற்கும். சனி, ஞாயிறு சுபமாகும்.

## 7, துலாம் – சித்திரை $\frac{1}{2}$ – சுவாதி – விசாகம் $\frac{3}{4}$

துலா ராசி பலன் பூரண சுபமாகும். அசாத்தியமெல்லாம் சுலப சாத்தியமாகும். மேலோர் பெரியோர் அன்பு கிடைக்கும். புண்ணிய க்ஷேத்திராடனமும், தான தர்ம பலனும் தரும். தெய்வ ஸாந்நித்தியம் ஏற்படும், தேவதா மந்திர யந்திராதிகளால் பூரண சுகம் தரும். திங்கள், செவ்வாய் சுபமாகும்.

## 8. விருச்சிகம் – விசாகம் $\frac{1}{4}$ – அனுஷம் – கேட்டை.

கேட்டை மூன்று நக்ஷத்திரமும், 9 பாதங்களும் விசேஷ சுபத்தைத் தரும். இடம் மாறல் ஏற்படும். மேல் பதவி கிடைக்கும். நூதனமான முறையில் வியாபாரமும், கிருஷிகாரியங்களும் ஏற்படச்செய்யும். புதன், வியாழன் சுபமாகும்.

## 9. தனுசு – மூலம் – பூராடம் – உத்திராடம் $\frac{1}{4}$.

தனுர் ராசி பலன் மிச்சிரமாகும், வரவு செலவு சமனுகும், வாழ்க்கைத்தரம் உயரும். தர்மகாரியங்கள் ஏற்படும். சுப விரயங்களும், குடும்பத்தில் அனுகூலமும், புத்திராதிகளால் சௌக்கியமும் தரும். வெள்ளி, சனி சுபமாகும்.

## 10. மகரம்– உத்திராடம் $\frac{3}{4}$ – திருவோணம் – அவிட்டம் $\frac{1}{2}$

மகர ராசி பலன் பூரண சுபமாகும். கிரய விக்கிரயத்தால் லாபம் தரும். நூதன கட்டிடங்கள் வேலை ஏற்படும். சஞ்சாரத்தால் அதிக அலைச்சல் காட்டும். ஜீவனம் ஓங்கும். மூன்றுவிதமான தொழில் ஏற்படும். மேலோர் பெரியோர்களின் அன்பினல் சகலமும் சாத்தியமாகி ஸ்திரவாஸம் ஏற்படும். ஞாயிறு, திங்கள் சுபமாகும்.

## 11. கும்பம் – அவிட்டம் ½ – சதயம் – பூரட்டாதி ¾,

கும்ப ராசி பலன் மிசிரமாகும். சரீரம் ஆரோக்கியம் தந்து மறுபடியும் வியாதி பயத்தைத்தரும். வைத்திய செலவு அதிகமாகும். கோடைக்கால நோயும் தரும். வியவகாரம் ராஜியாகும். வரவு செலவு சமனாகும். செவ்வாய், புதன் சுபமாகும்.

## 12. மீனம் – பூரட்டாதி ¼ – உத்திரட்டாதி – ரேவதி.

மீன ராசி பூராவும் சுபமாகும். வித்தியா விருத்தியாகும். தூர சஞ்சாரம் ஏற்படும். மாதுரு வம்சத்தில் குறைவும், அசுசிகளும் மண்டல மத்தியில் தரும். தெய்வீகக் காரியங்கள் தவக்கத்துடன் பூர்த்தியாகும். ஜீவன விருத்தி, பெரியோர் அன்பு, தெய்வ பலம் எல்லாம் முன்னின்று காக்கும். வியாழன், வெள்ளி சுபமாகும்.


## குமரகுருபரன்

தருமையாதீனத்து முனிபுங்கவரும், ஸ்ரீ காசி மடத்து முதல்வருமான ஸ்ரீலஸ்ரீ குமரகுருபர சுவாமிகளினுடைய திருப்பெயர் பூண்டு, சமயம், இலக்கியம், அறம் முதலியவற்றை எளிய நடையில் தெளியச் செய்யும் ஆராய்ச்சிவிளக்கத்துடன் திருப்பனந்தாள் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களது ஆணையின் வண்ணம் உயரிய இவ்விதழ் வெளிவருகிறது.

ஆண்டுச் சந்தா :- ரூ. 3—00

விலாசம் :— நிர்வாக ஆசிரியர்.

உயர்திருவாளர், T. M. குமரகுருபரன் பிள்ளை
B. A., B L., அவர்கள்
குமரகுருபரன் ஆபீஸ், ஸ்ரீவைகுண்டம்.

உ

குருபாதம்

ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி கோயில்

# மகோற்சவப் பத்திரிகை

## சிறப்புத் திருநாள் நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| 5—6—71 | சனி | துவஜாரோகணம். |
| 9—6—71 | புதன் | சகோபுரரிஷபவாகனக்காட்சி. |
| 11—6—71 | வெள்ளி | திருக்கல்யாணம் வெள்ளிரதக் காட்சி. |
| 13—6—71 | ஞாயிறு | திருத்தேர் |
| 14—6—71 | திங்கள் | காவிரியில் பஞ்சமூர்த்திகள் தீர்த்தம் கொடுத்தல்: துவஜாவரோகணம். |

14—6—71 திங்கட்கிழமை

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

## குருபூஜை விழா

15—6—71 செவ்வாய்க்கிழமை

ஸ்ரீலஸ்ரீ கயிலைக் குருமகாசந்நிதானம் அவர்களின்

## பட்டணப்பிரவேசம்

5—6—71 முதல் 15—6—71 முடிய

## திருநெறிய தெய்வத்தமிழ் மாநாடும்

## சித்தாந்தப் பாட வகுப்பும்

நடைபெறும்.

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

குருபாதம்

# சிவபெருமான்

சீர்கொண்ட ஆனந்தமாகி எங்கும்
செறிவாகிப் பரமாகித் திறம தாகி
ஏர்கொண்ட கருணைத்திரு வுருவமாகி
எழில்கொண்ட மலைமகளை இடத்திற் கொண்டோன்
கார்கொண்ட நிறங்கொண்ட முகுந்த னாதிக்
கடவுளர்வந் தடிபரவும் கடவுள் கொன்றைத்
தார்கொண்ட முடியனவன் அடியைத் தாழ்ந்து
தாழாத பெருங்கதியில் வாழா நிற்பாம்.

தருமையாதீனக் குருமுதல்வர்

## ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்

சீரணியும் நுதலின்விழி மழுமான் நாகம்
திருந்தும்எரி பொருந்துவிடம் தெரிந்திடாமல்
தாரணி அன்பரையாள அவர்போல் வந்த
சைவசிகா மணிஎவர்க்கும் தலைவன் எங்கோன்
காரணியும் நெடியபொழிற் கமலை வேந்தன்
கருணைமழை பொழியும்இரு கடைக்க ணாளன்
பார்புகழும் ஞானசம் பந்தன் எந்தை
பரமன்இரு சரணமலர் பரவி வாழ்வாம்.

— சம்பந்த சரணாலயர்.

உ

குருபாதம்

பெருங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் ஆன்மாக்கள் மீது வைத்த எல்லையிலாப் பெருங்கருணையினாலே, காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நிகழ் குறியாம் சிவ லிங்கமாதி திருவுருக்கொண்டு எழுந்தருளி யிருக்கின்ற தலங்கள் பலவற்றுள் இந்திரன், அகத்தியர், தருமன் ஆகியோர்களால் பூசிக்கப்பெற்றதும், காவிரி முதலிய தீர்த்தங்களால் சிறப்புற்றதும், வில்வாரண்யம் என்னும் சிறப்புத் திருநாமம் உற்றதும், குருபீடஸ்தானமும் ஆகிய தருமபுரத்தின்கண் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற ஸ்ரீ ஞானம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீஸ்வரசுவாமிக்கு நிகழும் விரோதிகிருதுஆண்டு வைகாசித்திங்கள் 22ஆம் நாள் (5—6—71) சனிக்கிழமை தொடங்கி மகோற்சவம் நடைபெறும்.

இந்நாட்களில் "திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு" நடைபெறும். சிவநேசச் செல்வர்கள் யாவரும் வந்திருந்து திருவிழாக் காட்சியைத் தினமும் தரிசித்தும், சொற்பொழிவுகளைக் கேட்டும் இன்புறுக.

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்,
கார்பார்

**சொக்கநாதத் தம்பிரான்.**

தருமையாதீன
மடாலயம்
**விரோதிகிருது - சித்திரை**

---

ஆதீன மடாலய திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் நாள்தோறும் மாலை 6 மணி முதல் மாநாட்டு நிகழ்ச்சிகளும், பூசை மடத்தில் காலை 10 மணி முதல் சித்தாந்தப் பாட வகுப்பும் நடைபெறும்.

# ஆதி பரமாசாரிய மூர்த்திகள் சரிதம்

பாண்டிய நாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில், சைவவேளாளர் மரபில், ஸ்ரீ சுப்பிரமணிய பிள்ளை மீனாட்சியம்மை என்னும் பெற்றோர்க்கு அரும்பெறற் புதல்வர் ஒருவர் சோமவார சுப தினத்தில் தோன்றினர். பிள்ளைத் திருநாமம் ஞானசம்பந்தர் என்பது. இளமையிலேயே கல்வியில் குறைவில்லாது நிரம்பினர். பெற்றோர் தம் ஆன்மார்த்த மூர்த்தியாம் ஸ்ரீ சொக்கலிங்கத்தை வழிபட மதுரை சென்றபொழுது உடன்சென்ற ஞானசம்பந்தர் 'உண்மை அம்மை அப்பர் அங்கயற்கண்ணியும் ஆலவாய் அரனுமே' என்று சொல்லிப் பெற்றோருடன் ஊர் திரும்ப மறுத்து மதுரையிலேயே இருந்தார்.

நாள்தோறும் பொற்றாமரைத் தீர்த்தத்தில் மூழ்கிக் காலந்தோறும் ஸ்ரீ சொக்கநாதரை வழிபட்டு வந்தார். பொற்றாமரைத் தீர்த்தக் கரையில் சிவனடியார் பலர் நீராண்ட புரோதாயம் ஆடி, தூய வெண்ணீறு துதைந்த பொன்மேனியும் தாழ்வடமும் உடையவர்களாய் நாயகன் சேவடி தைவரும் சிந்தையுடன் அமர்ந்து நைந்துருகும் அன்போடு சிவபூஜை செய்தனர். அவ்வடியார்களது செயலில் ஒருநாள் ஞானசம்பந்தரது உள்ளம் ஈடுபட, முற்பிறப்பின் பூஜை உணர்வு அவருக்கு முகிழ்த்தெழுந்தது. ஆலவாய் அப்பனை, ஆன்மார்த்த மூர்த்தியாகப் பூஜிக்க அளவிலா ஆர்வங்கொண்டு அப்பெருமானை வேண்டினர். அப்பெருமான் அவரது கனவில் தோன்றி, 'முற்பிறப்பில் உன்னால் பூஜிக்கப்பெற்றுவந்த நாம், பூஜைப் பெட்டகத்துடன் பொற்றாமரைத் தீர்த்தத்துள் ஈசானத்திக்கில் இருக்கின்றோம்; மூழ்கிப் பெறுக' என்று அருளிச்செய்தார். ஞானசம்பந்தர் அங்ஙனமே மறுநாள் பொற்றாமரைத் தீர்த்தத்தில் மூழ்கி, ஆன்மார்த்த மூர்த்தியைப்பெற்று ஆனந்தபரவசம் உற்றார். பின், ஸ்ரீ சொக்கநாதர் சந்நிதியில் சென்று, 'பெருமானே, கண்ணுக்கினிய பெருமானாய் என் கரத்தில் வந்த உன்னைப் பூஜிக்கும் நெறியை அருள்புரிய வேண்டும்' என்று வேண்டினர். அன்று இரவு பெருமான் கனவில் தோன்றி, 'திருவாரூர் ஞானப்பிரகாசனிடம் ஞானோபதேசமும், சிவபூஜையும் பெறுக' என்று பணித்தருளி, ஞானப்பிரகாசரது கனவிலும் சென்று, 'உன்னிடம் வருகின்ற நம் ஞானசம்பந்தனுக்கு விதிப்படி சிவஞானோபதேசம் செய்து சிவபூஜையும்

எழுந்தருளப்பண்ணி வைப்பாயாக' என்று சொல்லி மறைந்தருளினர்.

திருவாரூரில் சித்தீச்சரத்தில் தென்முகக் கடவுள் திருமுன்பு சீடரின் வருகையைக் குருமூர்த்தி எதிர்நோக்கியிருந்தார். அருளாணையின்படி ஞானசம்பந்தர், கமலையை அடைந்து குருமூர்த்தியைக் கண்டதும், காந்தம் கண்ட இரும்புபோல் அவர் வசமாகி, சிவதீக்ஷையும்; சிவபூஜையும் எய்தினர். அவர் நாள்தோறும் ஸ்ரீ சொக்கலிங்கத்தைப் பூஜித்துப் பாடியதே சொக்கநாத வெண்பா. அவர் செய்த குருதோத்திரமே ஞானப்பிரகாசமாலை. ஒருநாள், ஞானப்பிரகாசர் பூங்கோயில் வழிபாட்டினை முடித்து மீள்கையில், கைவிளக்கெடுப்போன், ஆங்கு இல்லாமைகண்டு, ஞானசம்பந்தர் தாமே அப்பணியினை மேற்கொண்டு செல்ல, சிவத்தியான உள்ளத்துடன் செல்லும் குருமூர்த்திகள் இல்லத்தை அணுகியபொழுது, 'நிற்க, என்று சொல்லி உட்சென்றார். குருவாணை கடவாத ஞானசம்பந்தர் கைவிளக்கோடு வெளியிலே நின்றிருந்தார். மழை வந்தது, ஓர் அடியும் அப்புறம் பெயர்ந்திலர். மழை அவருக்கு மூன்றடி அப்பாற் சூழ்ந்தே பெய்தது. மறுநாட் காலையில் குருபத்தினியார் கண்டார்; குருமூர்த்தியும் கேட்டுவந்து, 'நீர் குவலயத்திற்கு உண்மை விளக்கும் குருவாயினீர்; தனி இடத்தில் இருந்து உண்மை நாடி ஓடி வரும் காரணர்க்கு உண்மை வைத்து சமய பரிபாலனம் புரிக' என்றார். சீடர்,

"கனக்கும் பொதிக்கும் எருதுக்கும் தன்னிச்சை கண்டதுண்டோ ?
எனக்கும் உடற்கும் எனதிச்சையோ ? இணங் கார்புரத்தைச்
சினக்கும் கமலையுள் ஞானப்ர காச சிதம்பரஇன்று
உனக்கிச்சை எப்படி ? அப்படி ஆக உரைத்தருளே"

என்று வேண்டினர். அது கேட்டுக் குருமூர்த்திகள், 'தருமபுரம் செல்க' எனப் பணித்தருளினர்.

ஞானசம்பந்தர் அன்றுமுதல் குருஞானசம்பந்தராகித் தருமபுரத்தை அடைந்து சமய பரிபாலனம் புரிந்தார்; ஞானநூல்கள் பல அருளினர்; ஆனந்தபரவசர் முதலிய பலர் வழி ஞான பரம்பரையை உலகில் நிலவச் செய்தருளினர். அவரே தருமபுர ஆதீன ஞானபீடத்தில் ஆதி பரமாசாரிய மூர்த்திகள்.

# திருநாள் விபரம்

| தமிழ் ஞூ மீ உ | இங்கிலீஷ் ஞூ மீ உ | கிழமை | திரு நாள் | உற்சவ விபரம் |
|---|---|---|---|---|
| வைகாசிமீ 21 | 4—6—71 | வெள்ளி | | காலை கணபதி ஹோமம். சித்திரா நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் மாலை மணி 6 to 7-15 விருச்சிக லக்னத்தில் அனுக்ஞை. விக்னேசுவர பூஜை. வாஸ்துசாந்தி. மிருத்ஸங்கிரஹணம். அங்குரார்ப்பணம். ரக்ஷாபந்தனம். |
| 22 | 5—6—71 | சனி | 1 | சித்திரா நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் உதயாதி 2-30 நாழிகைக்குமேல் 7-30 நாழிகைக்குள் ( காலை மணி 7-30 to 9 ) மிதுன லக்னத்தில் ஸ்ரீ ஞானாம்பிகா சமேத ஸ்ரீ ஞானபுரீஸ்வர சுவாமி மஹோத்ஸவ துவஜாரோகணம். |
| 23 | 6—6—71 | ஞாயிறு | 2 | கற்பகவிருக்ஷக் காட்சி. |
| 24 | 7—6—71 | திங்கள் | 3 | பூதம், பூதகி, இடும்ப வாகனக் காட்சி, |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| விரோதிகிருது | 25 | 8—6—71 | செவ்வாய் | 4 | நந்தி, காமதேனு, குதிரைவாகனக் காட்சி. |
| | 26 | 9—6—71 | புதன் | 5 | சகோபுர ரிஷப வாகனக் காட்சி. |
| | 27 | 10—6—71 | வியாழன் | 6 | யானை, அன்னம், ஆட்டுக்கடா வாகனக் காட்சி. |
| | 28 | 11—6—71 | வெள்ளி | 7 | இரவு மணி 7-30க்கு மேல் 9-க்குள் தனுர் லக்னத்தில் திருக்கல்யாண வைபவம்; புஷ்ப விமானம், வெள்ளிரதக் காட்சி. |
| | 29 | 12—6—71 | சனி | 8 | குதிரை, கிளி, யானை வாகனக் காட்சி. |
| | 30 | 13—6—71 | ஞாயிறு | 9 | காலை ( மணி **8-30 to 9 30** ) கடக லக்னத்தில் மஹா ரதாரோகணம்; திருத்தேர். |
| | 31 | 14—6—71 | திங்கள் | 10 | காலை ஸ்ரீ சபாநாயகர் தீர்த்தம் கொடுத்தருளல். பிறகு பஞ்சமூர்த்திகளும் ரிஷபாரூடராய் எழுந்தருளிக் காவிரியில் தீர்த்தம் கொடுத்தருளல். இரவு துவஜாவரோஹணம். |
| ஆனீ | 1 | 15—6—71 | செவ்வாய் | | மௌன உற்சவம். |
| | 2 | 16—6—71 | புதன் | | சண்டேசுவரர் உற்சவம். |



தருமையாதீனக் குருமுதல்வர்
ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்